பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2053 ஐப்பசி 22 செவ்வாய்க்கிழமை 08.11.2022 கதிர் 03

**இது ரகசியம் அல்ல!**

தீக்குச்சைக் கொண்டு விளக்கையும் ஏற்றலாம்; வீட்டையும் எரிக்கலாம்.

தீக்குச்சைக் கையில் எடுத்தவனின் மனநிலையை - எண்ணவோட்டத்தை - பொறுத்தது அவனாற்றப் போகும் செயலின் மகத்துவம் ☞2

# போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த யாழ். வீதிகளில் இராணுவச் சோதனைத் தடைகள்



## ஆளுநர் பரிந்துரையில் நடவடிக்கை என யாழ் தளபதி அறிவிப்பு



யாழ்ப்பாணம்,நவம்பர்08

போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்தும் முயற்சியாக நேற்றிலிருந்து இராணுவத்தினரால் முக்கியமான இடங்களில் சோதனைச் சாவடிகள் அமைத்து வீதியால் பயணிப்போரைச் சோதனையிட நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளதாக யாழ்ப்பாண இராணுவக் கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விஜயசுந்தர தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் போதை பொருள் பாவனை அதிகரித்துள்ள நிலையில் பாடசாலை ☞2

# அரசியல் தீர்வுடன் சேர்த்தேதான் பொருளாதாரத் தீர்வும் சாத்தியம்!



## கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தன் திட்டவட்டம் தமிழ்க் கனேடிய முதலீட்டாளர்களுக்கு விளக்கம்

கொழும்பு,நவம்பர்08

**நாட்டின் தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்று கிட்டினால் மட்டுமே அதனோடு சேர்ந்து பொருளாதாரத் தீர்வும் சாத்தியமாகும்.**

**- இவ்வாறு தம்மை நேற்று மாலை சந்தித்த தமிழ்க் கனேடிய முதலீட்டாளர்களுக்கு விளக்கம் அளித்திருக்கிறார் தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் இரா சம்பந்தன் எம்.பி.** ☞2

# 306 இலங்கை அகதிகளுடன் கப்பல் பிலிப்பைன்ஸ் அருகே மூழ்குகின்றது?

இலங்கையைச் சோந்த 306 பேருடன் கனடாவுக்குச் சட்ட விரோதமாக பயணித்த கப்பலொன்று பிலிப்பைன்ஸிற்கும் வியட்நாமிற்கும் இடையிலுள்ள கடற்பரப்பில் சூறாவளி காற்றில் சிக்குண்டு கடலில் முழ்கி வருவதாகவும், கப்பலில் உள்ளவர்களை உடனடியாகக் காப்பாற்றுமாறும் அந்த கப்பலில் இருந்த செய்மதித் தொலைபேசி ஊடாக இலங்கை உட்பட பல இடங்களுக்குச் செய்தி அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

இந்த சம்பவம் தொடர்பில் இலங்கை கடற்படை உடனடி ஆய்வொன்றை ஆரம்பித்துள்ளதாகவும் கூறப்படுகிறது. ☞2

**பிந்திய செய்தி**

## பயணிகளை மீட்டது சிங்கப்பூர் கடற்படை

சட்டவிரோதக் குடியேற்றவாசிகள் எனச் சந்தேகிக்கப்படும் 300க்கும் அதிகமான இலங்கைத் தமிழர்களை ஏற்றிச் சென்ற கப்பல் சூறாவளியில் சிக்கித் ☞2

## காட்டுயானை தாக்கி அதிகாரி உயிரிழப்பு

உடவளையில்யானைகள் காப்பகத்தில் கடமையாற்றிய வனவிலங்கு அதிகாரி ஒருவர் யானையின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

நேற்றுக் காலை வனவிலங்கு ☞2

# மலையகத் தமிழர் தேசிய இனம்: ஜனாதிபதி அறிவிக்க வேண்டும்

## அருட்தந்தை சத்திவேல் வலியுறுத்து




மலையகத் தமிழர்கள் இந்நாட்டில் வாழும் இன்னுமொரு தேசிய இனம் என ஜனாதிபதி எதிர்வரும் சுதந்திர தினத்தில் அறிவிக்க வேண்டும். அதற்கான அழுத்தத்தைக் கொடுக்க மலையகக் கட்சிகள் கூட்டு முயற்சி எடுக்க வேண்டும் - என்று மலையக மக்களின் ☞2

# மு.காவில் இடைநிறுத்தப்பட இரு எம்.பிக்களுக்குப் பதவி

## பேராளர் மாநாட்டில் நேற்று முடிவு





(கே.எ.ஹமீட்)

முஸ்லிம் காங்கிரஸின் முப்பதாவது பேராளர் மாநாடு நேற்றுப் புத்தளத்தில் கே.ஏ. பாயிஸ் ஞாபகார்த்தக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. ☞2

# பொருளாதார நெருக்கடியிலிருந்து நாடு மீள்வதற்கு முதலில் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதே ஒரே வழி!

## இடித்துரைக்கின்றார் ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் சுரேஷ் பிரேமச்சந்திரன்



யாழ்ப்பாணம், நவ.08

அண்மையில் அரச தலைவர்கள் புதிய அரசியல் யாப்பு தொடர்பாகவும் அதனூடாக தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாகவும் நாட்டின் பல பாகங்களிலும் குறிப்பாக வடக்கு மாகாண விஜயங்களின்போது பேசிவருகின்றனர். அவர்கள் உண்மையில் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு விருப்பமுடையவர்களாக இருக்கின்றார்களா என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் க.பிரேமச்சந்திரன்கேள்விஎழுப்பியுள்ளமையுடன், நாட்டை இன்றைய நிலையிலிருந்து முன்னோக்கி நகர்த்த வேண்டுமாக இருந்தால், தென்னிலங்கை அரசியல் சமூகம் இதய சுத்தியுடன் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முன்வரவேண்டும் என்றும் கோரியுள்ளார்.

அண்மையில் யாழ்ப்பாணம் ☞12

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அல்லது இழிநிலைமை.

அப்படி ஒரு தீக்குச்சைத்தான் இப்போது வடக்குப் படைகளின் கட்டளைத் தளபதி, வட மாகாண ஆளுநரின் பரிந்துரையில் கையில் எடுத்திருக்கின்றார்.

இங்கு தீக்குச்சு என்பது யாழ்ப்பாணத்தின் பிரதான வீதிகளில் அமைக்கப் பட போகின்ற திடீர் வழிமறிப்பு சோதனைச் சாவடிகள். அவற்றை வைத்து நல்லதும் செய்யலாம், தீயவற்றையும் ஆற்றலாம்.

போதைப் பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா வழங்கிய பரிந்துரையின் அடிப்படையில், இந்தச் சோதனைச் சாவடிகள் அமைக்கப்படுகின்றன என யாழ் கட்டளைத் தளபதி அறிவித்திருக்கின்றார்.

நல்லது. எனினும் இந்நடவடிக்கையை ஒட்டி தென்னிலங்கை ஆட்சி பீடத்தின் தரப்புகள் - வடக்கு மாகாண ஆளுநர் உட்பட - ஒரு விடயத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இங்குள்ள அரசு படைகளையோ, பொலிஸையோ, இந்தத் தமிழர் தேசத்து தமிழ் மக்கள் தங்களது தாயகத்தின் படைகளாகவோ, தங்களது பொலிஸாகவோ கருதி செயற்பட்டவர்கள் அல்லர் என்ற யதார்த்தப் புற உண்மைதான் அது.

அவர்களை (இராணுவத்தையும் பொலிஸையும்) ஈழத் தமிழர்கள் ஆக்கிரமிப்பு இராணுவமாகவும் ஆக்கிரமிப்புப் பொலிஸாகவுமே கருதுகிறார்கள்.

அதற்குக் காரணம் உண்டு. இந்த இராணுவமும் பொலிஸும் அந்தத் தமிழ் மக்களின் தேவைகள், நோக்கங்கள், கட்டாயங்கள் போன்றவற்றைப் புரிந்து கொண்டு அவற்றுக்குத் தீர்வு தரும் வகையில் செயல்படுபவை அல்ல. மாறாக, பௌத்த - சிங்கள ஆட்சி அதிகார தரப்புக்களின் நோக்கங்கள், இலக்குகளை, அடக்குமுறை நடவடிக்கைகளை தமிழர் தாயகத்தில் செயல்படுத்தும் ஏவல் படையணிகளாகவே அவை செயற்பட்டு வந்துள்ளன.

இப்போதும் கூட பெருவீதிகளில் அமைக்கப்படும் சோதனைச் சாவடிகள் குறித்து வடக்குத் தமிழர்களுக்கு அச்சங்கள் உண்டு.

வரப்போகின்ற மாவீரர் தினத்தை ஒட்டிய கெடுபிடி நடவடிக்கைகளுக்கான ஆயத்தமே இப்படி வீதித்தடை சோதனைச் சாவடிகள் திறப்பு என்ற எண்ணம் - சந்தேகம் - அவர்களுக்கு உண்டு.

குச்சொழுங்கைகள், குறுக்குப் பாதைகள், சந்திகள், போக்குவரத்துத் தடங்கள் நிறைந்த யாழ்ப்பாணக் குடாநாட்டின் புவியியல் கட்டமைப்பை எடுத்துப் பார்ப்பவர்கள், பிரதான வீதியில் திறக்கப்படும் இத்தகைய திடீர் சோதனைச் சாவடிகள் மூலம் போதைப்பொருள் நகர்வைக் கண்டுபிடித்துக் கட்டுப்படுத்தலாம் என நம்ப மாட்டார்கள் என்பது நிச்சயம்.

எனவே, அரசு படைகள் இப்போது குடாநாட்டு வீதிகளில் திறக்கப் போகும் சோதனைச் சாவடிகள், போதைப்பொருள் கடத்தல் போன்ற சமூக சீரழிவுகள், களவு வேலைகளைக் கட்டுப்படுத்துபவையாக இருக்க வேண்டுமே தவிர, தமிழர் தாயகத்தை மீண்டும் இராணுவ கொடூர பிடிக்குள் கொண்டு வரும் சிங்களத்தின் திட்டமாக அமையக்கூடாது என்பது முக்கியம்.

அதுவும் மாவீரர் வாரம் நெருங்கும் சமயத்தில் இத்தகைய திட்டம் கட்டவிழ்வது மக்களின் மனதில் இயல்பாகவே சந்தேகத்தைத் தோற்றுவிக்கும் என்பது மறுக்க முடியாத நிஜம்.

எது, எப்படி என்றாலும், போதைப் பொருள் பாவனை எனும் கொடூர அரக்கனின் கையில் சிக்குப்பட்டிருக்கும் தமிழர் தேசத்தை, அதிலிருந்து விடுவிக்கும் இறுக்கமான - கட்டுப்பாடான - நடவடிக்கைகளை சிங்களப் படைகள் நீதி, நியாயமாக முன்னெடுத்து, காரிய சித்திகளைக் காட்டுமானால், அது மெல்ல தமிழர் தேசத்தின் மனக்கதவுகளை சிங்களப் படைகள் திறந்து வெற்றிகொள்வதற்கான மார்க்கமாக அமைந்து விடும் என்பதும் கூட மறுப்பதற்கு இல்லை.

கையில் வைத்திருக்கும் தீக்குச்சைக் கொண்டு விளக்கை ஏற்றுவதும், வீட்டை எரிப்பதும் சிங்களப் படைகளின் நேர்மைத்தனத்தில்தான் தங்கியுள்ளது.

- மின்னல் -

## போதைப்பொருள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர்கள் மற்றும் இளைஞர்களை இலக்கு வைத்து இந்தப் போதைப் பொருள்கள் விற்பனை செய்யப்படுகின்ற நிலையில் இந்த விடயம் தொடர்பில் அண்மையில் விஜயம் மேற்கொண்ட நீதி அமைச்சர் மற்றும் வடக்கு மாகாண ஆளுநரால் போதை பொருள் பாவனையைக் கட்டுப்படுத்தும் முகமாக யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயும் விசேட கூட்டம் இடம்பெற்றிருந்தது. வடக்கு மாகாண ஆளுநரின் பரிந்துரைக்கு அமைய நேற்று முதல் யாழ்ப்பாணத்தின் முக்கியமான இடங்களில் இராணுவத்தினரால் சோதனைச் சாவடி அமைக்கப்பட்டு போதை பொருள் விநியோகம் மற்றும் போதை பொருள் பாவிப்போர் கைது செய்யப்பட உள்ளனர் எனவும் தெரிவித்தார்.

மேலும் போதைப் பொருள் விற்பனை செய்பவர்கள் மற்றும் போதைப் பொருள் பாவிப்போர் தொடர்பில் ஏதாவது தகவல்கள் தெரிந்தால் பொதுமக்கள் அருகில் உள்ள இராணுவ முகாமில் தகவல்களை தெரிவிக்கும் பட்சத்தில் அந்தச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்களை கைது செய்ய உதவியாக இருக்கும் என அவர் தெரிவித்தார்.

இவ்விடயத்தில் இராணுவத்தினரால் யாழ்ப்பாணத்தின் முக்கிய இடங்களில் சோதனைச் சாவடிகள் அமைக்கப்படும். எனவே பொதுமக்கள் இந்த விடயத்திற்கு நமக்கு பூரண ஒத்துழைப்பினை வழங்க வேண்டும்.

நமது எதிர்கால சந்ததியினரைப் போதைக்கு அடிமையாக்குவதற்கு நாங்கள் இடமளிக்காது, போதைக்கு அடிமையானவர்களை இனம் கண்டு, அவர்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கவே சோதனை சாவடிகள் அமைக்கப்படுகின்றன. எனவே பொதுமக்கள் யாழ்ப்பாணத்தில் போதை பொருள் பாவனையினை குறைப்பதற்கு எமக்கு முழு ஒத்துழைப்பினையும் வழங்க வேண்டும். - எனத் தெரிவித்தார்.

## அரசியல் தீர்வுடன் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று மாலை கொழும்பில் உள்ள சம்பந்தனின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இந்தச் சந்திப்பு இடம் பெற்றது. சில தமிழ் கனேடிய முதலீட்டாளர்கள் அந்த நாட்டின் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களோடு சம்பந்தனை சந்தித்து உரையாடினர். இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்.ஏ.சுமந்திரன், இராசமாணிக்கம் சாணக்கியன் ஆகியோரும் பங்கு பற்றினர்.

இலங்கையில் தமிழ் கனேடிய புலம்பெயர் மக்கள் முதலீடு செய்ய எடுத்த முடிவை சம்பந்தன் பாராட்டி, வரவேற்றார்.

"நாட்டுக்கும் தமிழர் தேசத்துக்கும் முதலீடுகள் அவசியம். ஆகவே இந்த முதலீடுகள் தமிழர் தாயகத்துக்கும் வரப் பிரசாதம்தான். இதன் மூலம் எமது தமிழர் தாயகத்துக்கும் விருத்தியும், எமது மக்களுக்கு வேலை வாய்ப்பும் கிட்டும்.

ஆனாலும், நாட்டின் பொருளாதார முயற்சி என்பது வெறுமனே வெளிநாட்டு முதலீடுகள் மூலம் மட்டும் எட்டப்பட்டு விட முடியாது. நாடு தன்னை அபிவிருத்தி செய்வதற்கான சூழமைவு இங்கு ஏற்பட வேண்டும். தேசிய இனப் பிரச்சினையை மோசமாக கையாண்டதன் விளைவு தான் இந்த பொருளாதார பிரச்சினை; நெருக்கடி.

ஆகவே, இதிலிருந்து மீள்வதாயின் முதலில் தேசிய இனப் பிரச்சினைக்கு இணக்கமான ஒரு தீர்வு காணப்பட வேண்டும். அத்தகைய சூழலில்தான் பொருளாதார மீட்சியும் சாத்தியமாகும்.

எனவே நமது தாயகத்தில் முதலீடு செய்யும் அதே சமயத்தில், அந்த முதலீடு மூலம் நாடு பொருளாதார மீட்சி பெறக்கூடிய சூழமைவை உருவாக்குவதற்காக உங்கள் நாட்டு அரசுகள் மூலம் இங்கு தேசிய இனப் பிரச்சினைக்கு இணக்கமான - நியாய - தீர்வு கிட்டுவதற்கான அழுத்தத்தையும் நீங்கள் கொடுக்க வேண்டும்.

வெளிநாட்டு முதலீட்டுக்கும் தேசிய இனப் பிரச்சினை தீர்வுக்கும் உள்ள பிரிக்க முடியாத இணைப்பைப் புரிந்து கொண்டு, அதன் அடிப்படையில் முதலீடுகளை நீங்கள் முன்னெடுக்க வேண்டும்."

- என்று சாரப்பட சம்பந்தன் இந்தச் சந்திப்பில் கருத்துரைத்தார் என அறிய வந்தது.

## 306 இலங்கை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பலைத் தாக்கும் சூறாவளியால் கப்பலில் தேங்குகின்ற நீரை அகற்றி, கப்பலைப் பாதுகாக்கும் முயற்சியும் நடப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

பயணத்தை ஒழுங்கு செய்தோர் மாற்றுக் கப்பல் ஒன்றை ஏற்பாடு செய்யும் முயற்சியில் உள்ளனர் என்று கப்பல் பயணிகளுக்குக் கூறப்பட்டதாகவும் ஒரு தகவல் தெரிவித்தது.

## பயணிகளை மீட்டது ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தத்தளித்துக் கொண்டிருந்த நிலையில் அதிலிருந்தவர்களை சிங்கப்பூர் கடற்படையினர் காப்பாற்றியுள்ளனர் என பிந்திக் கிடைத்த செய்தி ஒன்று தெரிவித்தது.

கப்பலில் இருந்த இலங்கைக் குடிமகன் ஒருவர் கடற்படையினரை அழைத்துத் தாங்கள் ஆபத்தில் இருக்கின்றனர் எனத் தெரிவித்தமையை அடுத்து, கொழும்பு கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையம் சிங்கப்பூர், வியட்னாம் மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளின் உதவியை நாடியிருந்தது.

பின்னர் கப்பலில் இருந்தவர்களை மீட்க முடிந்ததாக சிங்கப்பூர் அதிகாரிகள் இலங்கையில் உள்ள கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்துக்குத் தகவல் தெரிவித்தனர்.

அதன்படி சிங்கப்பூர் அதிகாரிகள் கப்பலில் இருந்தவர்களை மீட்டு, வியட்நாமுக்கு அழைத்துச் சென்று, அவர்களின் அடையாளம் அங்கு வைத்து உறுதி செய்யப்படும் எனத் தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

## மு.காவில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியை விட்டு இடைநிறுத்தப்பட்ட பைல் ஹாசிம், எம் எஸ் தௌபீக் ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர் பேராளர் மாநாட்டில் கலந்து கொண்டார்கள். நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் கலந்து கொள்ளவில்லை.

புதிய நிர்வாகிகள் தெரிவு நேற்று இடம்பெற்றது.

கட்சியைவிட்டு இடைநிறுத்தப்பட்டவர்களுக்கு பதவிகள் வழங்கக் கூடாது என உயர்பீட உறுப்பினர்களுக்கு மத்தியில் கருத்து வெளிப்பாடு இருந்தது. ஆயினும் ஹபீஸ் நஸீர், எச்.எம்.ஹரிஸ் தவிர்ந்த ஏனைய இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பதவிகள் வழங்க வேண்டும் என்று கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் விடாப்பிடியாக இருந்தார்.

இதன் காரணமாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் கட்சியின் தேசிய அமைப்பாளராக தேர்வு செய்யப்பட்டார்.

கட்சியின் பொருளாளராக நாடாளுமன்ற உறுப்பினர் பைல் காசிம் தெரிவு செய்யப்பட்டார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஐ.எம்.மன்சூர், முன்னாள் ராஜாங்க அமைச்சர் அலிசாஹீர் மௌலானா, கட்சியின் ஸ்தாபக செயலாளர் சட்டத்தரணி எஸ்.எம்.ஏ.கபூர் ஆகியோர் பிரதித் தலைவர்களாகத் தெரிவு செய்யப்பட்டார்.

முன்னாள் மாகாண அமைச்சர் உதுமாலெப்பை பிரதி தேசிய அமைப்பாளராக நியமிக்கப்பட்டார்.

தவிசாளராக முழக்கம் மஜீத், செயலாளராக சட்டத்தரணி நிஸாம் காரியப்பர், தலைவராக ரவூப் ஹக்கீம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

முன்னாள் ராஜாங்க அமைச்சர் எச்.எம்.எ.ஹரிஸ், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள் எல்.தவம், ஆரிப் சம்சுதீன் போன்றோர் பேராளர் மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை.

## காட்டுயானை தாக்கி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தியோகத்தர் யானைகளுக்கு உணவளிக்கச் சென்ற போதே யானையால் தாக்கப்பட்டுள்ளார். காயமடைந்த அதிகாரி எம்பிலிபிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த அதிகாரி பாணடுவ பிரதேசத்தை சேர்ந்த 22 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மலையகத் தமிழர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாண்பைப் பாதுகாக்கும் அமைப்பின் ஆலோசகரான அருட்தந்தை மா.சத்திவேல் வலியுறுத்தினார்.

அவரால் இன்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மலையக மக்கள் எதிர்வரும் 2023 ஆம் ஆண்டில் இந்த நாட்டில் இரு நூற்றாண்டு வரலாற்று வாழ்வை நிறைவு செய்வதுடன் புதிய நூற்றாண்டு வாழ்வையும் ஆரம்பிக்கின்றனர். இது தொடர்பில் பொது அமைப்புக்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் தனித்தனியாக ஆங்காங்கு நிகழ்வுகளை நடத்தத் திட்டமிட்டுள்ளன.

இந்நிலையில், மலையக மக்களை நம்பி அரசியல் செய்யும் கட்சிகள் இரு நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு மலையக மக்களுக்கு எத்தகைய அரசியல் கௌரவத்தைப் பெற்றுக் கொடுப்பதற்குத் தனித் தனிக் கட்சிகளாகவோ அல்லது கூட்டாகவோ ஆயத்தமாக உள்ளன.

இந்தக் கட்சிகள் எத்தகைய அரசியல் மற்றும் பொருளாதார சமூக அடைவை நோக்கி அழைத்துச் செல்லவுள்ளன என்பது தொடர்பில் தமது கருத்துக்களை அவசரமாக வெளிப்படுத்த வேண்டும் என மலையக மக்களின் மாண்பைப் பாதுகாக்கும் அமைப்பு வேண்டுகோள் விடுக்கின்றது.

அண்மையில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் செயலகத் திறப்பு விழாவில் மலையகப் பிரதான கட்சிகளோடு பேரினவாதக் கட்சியினரும் கூட்டாக மேடையில் அமர்ந்திருந்ததை ஊடகங்கள் வெளிப்படுத்தியிருந்தன.

இது வெறும் மேடை நாடகமாகவோ அல்லது தேர்தலுக்கான வியூகமாகவோ மட்டும் அமைந்துவிடக் கூடாது என்பதே மலையக மக்களின் எதிர்பார்ப்பு. மக்கள் எதிர்பார்ப்பை நிறைவேற்றாது விடின் அது பெரும் அரசியல் துரோகமாகவே கொள்ளப்படும்.

தை பிறந்தால் வழி பிறக்கும் எனக் கூறுவார்கள். ஆனால் மலையக மக்களுக்கு வலி மட்டுமே பிறக்கின்றது. இன்னும் இந்நாட்டில் மூன்றாம் தரப் பிரஜைகளாகவே வைக்கப்பட்டுள்ளனர். இந்த நிலை மாற வேண்டுமானால் வாக்களிக்கும் இயந்திரங்களாக அன்றி நாட்டின் பிரஜைக்குரிய கௌரவத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

அத்தகைய அரசியல் அடைவை நோக்கிய அரசியல் கருத்தியலையும் அதற்கான பயண வழிவரைபடத்தையும் எதிர்வரும் ஆண்டு பிறப்பதற்கு முன்னர் டிசெம்பர் மாதம் 10ஆம் திகதி சர்வதேச மனித உரிமைகள் தினத்தில் வெளிப்படுத்தினால் சிறப்பாக அமைவதோடு அனைவரது கவனத்தையும் ஈர்க்கும். அத்தோடு இருநூற்றாண்டு வரலாற்று நிகழ்வுகளும் அதனை மையப்படுத்தியதாக்கிட இலகுவாகவும் அமையும்.

மலையக மக்களுக்கு எதிர்வரும் ஆண்டு இரு நூற்றாண்டு வரலாற்று முக்கியத்துவம் மிக்க ஆண்டாக இருப்பது போல் இலங்கைக்கு 75 ஆவது சுதந்திர ஆண்டாகவும் அமைகின்றது. மலையக மக்கள் நாட்டின் பொருளாதாரம், அபிவிருத்தி, கட்டுமானம், பாதை அமைப்பு, அந்நியச் செலாவணியை ஈட்டித் தருதல், அரசியல் என அனைத்துத் துறைகளிலும் பெரும் பங்காற்றி தமது அடையாளத்தையும் பதித்துள்ளதோடு உயிர்த் தியாகமும் செய்துள்ளனர்.

இதனைக் கௌரவிக்கும் முகமாக

(12ஆம் பக்கம் பார்க்க)

# இன்றுடன் பதிவுகள் அனைத்தும் நிறைவடைகின்றன

# அமெரிக்க லொத்தர் விசா

## நீங்களும் அமெரிக்காவில் குடும்பத்துடன் வாழலாம்...

ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!






அலுவலர்களின் நன்மை கருதி சனி, ஞாயிறு உட்பட இரவு 7 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்

மிக மிக அரிய சந்தர்ப்பம் தவறவே விடாதீர்கள்

அலட்சியம் வேண்டாம்

கடந்த காலங்களில் வாய்ப்புக்களை தவறவிட்டு
விண்ணப்பிக்காதவர்கள் அப்படியே இருக்க
நம்பிக்கையுடன் எம்மூடாக விண்ணப்பித்தவர்கள்
விசா பெற்று அமெரிக்கா சென்றுவிட்டார்கள்.

நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்

ஆச்சரியம்! ஆனால் உண்மை.

18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்

அனைவருக்குமான இலவச சந்தர்ப்பம்

திருமணமானவர்களுக்கு ஒரே நேரத்தில் இரண்டு வாய்ப்புக்கள்

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற ஓர் அரிய சந்தர்ப்பம்

படித்தவர்கள், பட்டதாரிகள், அரச வேலை செய்பவர்கள், தனியார் துறையில் வேலை செய்பவர்கள், வேலையில்லா பட்டதாரிகள், A/L பரீட்சை எடுக்கும் மாணவர்கள், வெளிநாட்டில் படிக்க விரும்பும் மாணவர்கள் அனைவருக்கும் இது அரிய இறுதி சந்தர்ப்பமாகும். பயன்படுத்துங்கள்! பலன் பெறுங்கள்!

240 இதுவரை எம்மூடாக விண்ணப்பித்தவர்களுள் 240 பேருக்கு மேல் அமெரிக்காவில் வாழ்கின்றார்கள்.

இளைஞர்களே, யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா?

இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் 55'000 பேருக்கான அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?

உங்களுக்கு விசா கிடைத்தால் உங்களுடன் சேர்த்து உங்கள் (காதலன்/காதலி) எதிர்கால வாழ்க்கைத்துணையையும் அழைத்துச்செல்லலாம்

**0768226244**
**0768226240**

நீங்கள் செலுத்தும் ஒவ்வொரு
சதமும் இன்னொருவருக்கான
விசா வாய்ப்பாக அமையும்

பதிவுகளுக்கு Passport தேவையில்லை

முக்கிய அறிவித்தல்

ஒருவிதத்தில் நாம் அனைவரும் அதிஷ்டசாலிகள்தான் கடந்த வருடங்களில் கட்டாயமாக்கப்பட்ட பாஸ்போட் நடைமுறை இந்த வருடம் தளர்த்தப்பட்டுள்ளது.இதன்மூலம் இலங்கையில் உள்ள மக்கள் அனைவரும் பாஸ்போட் இல்லாமலேயே விசா வாய்ப்பினை பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி - 08-11-2022

ALERT சிந்தியுங்கள்!!! உடனடியாக பதிவுசெய்யுங்கள்!

கடைசி 7 நாட்களும் உலகம் முழுவதிலுமிருந்து அதிக விண்ணப்பங்கள் போடப்படுவதால் அமெரிக்க லொத்தர் இணையமானது அடிக்கடி முடங்குவதால் இறுதிக்கட்ட ஏமாற்றங்களை தவிர்க்க, முடிந்தளவுக்கு முன்னரே பதியுங்கள்.

## பதிவுகள் நடைபெறும் எமது கிளைகள்-விபரங்களுக்கு அழையுங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | -0777068777 | திருகோணமலை | - 0768226237 | கிளிநொச்சி | -0768226240 |
| நெல்லியடி | -0776699892 | கொடிகாமம் | - 0764550675 | சாவகச்சேரி | -0768226242 |
| புதுக்குடியிருப்பு | -0764550673 | சுன்னாகம் | - 0764550670 | மானிப்பாய் | -0768226238 |
| கோப்பாய் - | -0768226238 | புத்தூர் | - 0764550671 | பருத்தித்துறை | -0768226230 |
| வல்வெட்டித்துறை | -0776697960 | பண்டத்தரிப்பு | - 0777718322 | சங்கானை | -0777726322 |

கொழும்பு (வெள்ளவத்தை) - 0777469777

வெளிமாவட்டங்கள்- 0768226236

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தீர்வு காணும் காலமிது

**இரண்டு தமிழ் அரசியல் தலைவர்கள், ஒரே விடயத்தை ஏறத்தாழ ஏக காலத்தில் சுட்டிக் காட்டி இருக்கின்றனர்.**

**மற்றைய தமிழ்த் தலைவர்களும் அவ்வப்போது வெளிப்படுத்தி வந்த விடயம் தான் அது.**

**நாடு பொருளாதார நெருக்கடியில் இருந்து விடுபடுவதாயின், அதே சமயத்தில் – ஏக காலத்தில் – தேசிய இனப் பிரச்சினைக்கும் தீர்வு கண்டாக வேண்டும். இனப் பிரச்சினைக்கு நீதி, நியாயமான – நின்று, நிலைத்து, நீடிக்க கூடிய – நல்லிணக்கத் தீர்வு ஒன்றைக் காணாமல், பொருளாதாரப் பிரச்சினையிலிருந்து நாடு மீண்டெழ முடியாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனும், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரனும் நேற்று ஏறத்தாழ சமகாலத்தில் கருத்து வெளியிட்டு இருக்கின்றனர்.**

**தம்மைச் சந்தித்த கனேடிய தமிழ் வர்த்தக முதலீட்டாளர்களுடனான சந்திப்பின்போது இக் கருத்தை சம்பந்தன் வெளியிட்டார்.**

**அதேசமயம் ஊடக அறிக்கை மூலம் இதே நிலைப்பாட்டை சுரேஷ் பிரேமைச்சந்திரன் நேற்று முன் வைத்தார்.**

**தேசிய இனப் பிரச்சினைக்கு நீதி, நியாயமான தீர்வுஒன்றைக்காணும்முயற்சியில்தென்னிலங்கை பௌத்த, சிங்களப் பேரினவாதம் எப்போதுமே நேர்மைச் சிந்தனைத் திறத்துடன் பங்களிக்கவில்லை என்பது தமிழர் தரப்பின் தீராத அதிருப்தியாகும்.**

**பண்டா – செல்வா உடன்பாட்டில் இருந்து தொடங்கி, கடைசியாக நல்லாட்சி அரசில் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வையும் உள்ளடக்கிய புதிய அரசமைப்பைக் கொண்டு வரும் முயற்சி வரை, அப்படித் தான் தென்னிலங்கை பௌத்த, சிங்களப் பேரினவாதம் நடந்து கொண்டது.**

**அந்தப் பொறுப்பற்ற – திமிர்த் தனமான – பேரினவாத மேலாதிக்கச் சிந்தனையில் அமைந்த – அடக்குமுறை நடவடிக்கைகளின் பெறுபேறுதான் நாட்டை இன்று மீட்டெடுக்கவே முடியாத பொருளாதாரச் சீரழிவுக்குள்ளும் கொண்டு போய்த் தள்ளி நிற்கின்றது.**

**நாட்டின் தேசிய இனப் பிரச்சினைக்கு நல்லிணக்கம், புரிந்துணர்வு, இன சௌஜன்யம் ஆகியவற்றுடன் கூடிய சுமுகத் தீர்வு ஒன்றைக் கண்டால் தான் பொருளாதார நெருக்கடியில் இருந்தும் மீண்டெழும் அருமந்த வாய்ப்பு நாட்டுக்குக் கிட்டும் என்ற யதார்த்தப் புற உண்மை – சாத்தியமான நிலைப்பாடு – நாட்டில் உள்ள அனைத்துக் கட்சிகளுக்குமே நன்கு தெரியும்; அவற்றுக்கு நன்கு புரியும்.**

**ஆகையினால் நாட்டை சகிக்க முடியாத இந்தப் பொருளாதார இக்கட்டில் இருந்து மீட்டெடுக்கும் பணியை ஆரம்பிப்பதற்காகவாவது இனப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட தரப்புகளை இணைத்து, அதற்கான தீர்வைத் தேட இலங்கை அரசு முயல வேண்டும்.**

**பந்து இப்போது ரணில் – தினேஷ் குணவர்த்தன அரசுத் தரப்பின் களத்தில்.**

**அரசு தரப்பு பந்தை எப்படி விளையாடப் போகின்றதோ, அதன் அடிப்படையில்தான் நாட்டுக்கு இரண்டு பிரச்சினைகளில் இருந்தும் தீர்வு – மீட்சி – கிட்டுவது தங்கி உள்ளது.**

# கந்தக்காடு புனர்வாழ்வு நிலைய சம்பவம் தொடர்பாக முழுமையான அறிக்கை சமர்ப்பிக்க ரணில் பணிப்புரை!

கந்தக்காடு புனர்வாழ்வு நிலைய சம்பவம் தொடர்பில் முழுமையான அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நீதியமைச்சர் விஜேயதாஸ ராஜபக்ஷவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர், இவ்வாறான சம்பவங்கள் மீண்டும் இடம் பெறாமல் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.

கந்தக்காடு சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு நிலையத்தில் இடம்பெற்ற மோதலின் போது கைதிகள் 50 பேர் வரையில் தப்பிச் சென்றிருந்தனர்.

இந்நிலையில், அவர்களில் 35 பேர் மீண்டும் புனர்வாழ்வு மையத்தில் சரணடைந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் மோதல் சம்பவத்தில் 5 பேர் காயமடைந்துள்ள நிலையில் அவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். அதேநேரம், தப்பிச்சென்றுள்ள ஏனையவர்களைக் கண்டறிவதற்காக விசேட விசாரணைகள் இடம்பெற்று வருகின்றமை குறிப் பிடத்தக்கது.

# அடுத்த ஜனாதிபதி தேர்தலில் அரசியல் அரங்கம் போட்டி?

## என்கிறார் முன்னாள் எம்.பி. திலகராஜ்

'மலையக மக்களின் அடையாளம் கருதி, அடுத்த ஜனாதிபதி தேர்தலில் மலையக அரசியல் அரங்கம் போட்டியிடக்கூடிய சாத்தியம் உள்ளது.' என அரங்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளரும், நுவரெலியா மாவட்டத்தின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.திலகராஜ் தெரிவித்துள்ளார்.

ஹற்றனில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



மேலும் அவர் தெரிவிக்கையில் –

மலையக கட்சிகளின் இணைவு என்பது இப்போதைய தலைமுறைக்கு புதிய விடயமாக இருந்தாலும், எனது அரசியல் பயணத்தில் இதற்கு முன்னர் ஒற்றுமைகளைப் பல தடவைகள் பார்த்துள்ளேன்.

மேலும் 1999 இல் மயில் சின்னத்தில் தான் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் போட்டியிட்டது. இந்திய வம்வாவளி மக்கள் பேரணி எனபெயரும் இடப்பட்டது. தற்போதைய தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் கூட அந்த சின்னத்தில் போட்டியிட்டுதான் அரசியல் அறிமுகம் பெற்றார் எனவும் தெரிவித்தார்.

இதற்கமைய ஒரு வேலைத்திட்டம் முன் வைக்கப்பட்டு நடவடிக்கை இடம்பெறவேண்டுமே தவிர மாமன், மச்சான், தந்தை, மகன் என உறவு கொள்வதால் மக்களுக்கு எதுவும் நடக்கப்போவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# உடைமையில் ஹெரோயின் போதைப்பொருள்; இளவாலை பொலிஸாரினால் மூவர் கைது!

யாழ்ப்பாணம் இளவாலை பொலிஸாரால் ஹெரோயின் போதைப்பொருளுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இளவாலை பொலிஸார் கடந்த ஞாயிற்றுக்கிழமை திடீர் வீதி சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டபோது மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரிடம் போதைப்பொருள் மீட்கப்பட்டது.

அதேவேளை மற்றுமொரு மோட்டார் சைக்கிளில் பயணித்த இளவாலை பகுதியை சேர்ந்த இளைஞனை சோதனையிட்ட போதும் அவரிடம் இருந்தும் போதைப்பொருள் மீட்கப்பட்டது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட மூன்று இளைஞர்களையும் இளவாலை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# பஸ்கள் ஒவ்வொருநாளும் சோதனைக்கு உள்ளாகும்!

## வடக்கு ஆளுநர் அறிவிப்பு

நெடுந்தூர சேவையில் ஈடுபடும் பஸ்களின் வழித்தட அனுமதிப்பத்திரத்தை சோதனையிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

பஸ் விபத்து தொடர்பாக எடுக்கப்படவுள்ள நடவடிக்கை தொடர்பாக வினவிய போதே ஆளுநர் ஜீவன் தியாகராஜா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் யாழ்ப்பாணம் – கொழும்பு மற்றும் ஏனைய நெடுந்தூரங்களுக்கு சேவையில் ஈடுபடும் பஸ்கள் அனைத்தையும் ஒவ்வொரு நாளும் பரிசோதிக்கவுள்ளதாக கூறினார்.

ஏ-9 பாதையில் பயணம் செய்யும் பஸ்களை 10 நிமிடங்கள் நிறுத்தி சாரதிகளை சோர்வு தன்மையில் இருந்து நீக்குவதற்கு முயற்சி எடுத்துள்ளதாகத் தெரிவித்தார்.

அத்தோடு ஒவ்வொரு மாத கடைசியிலும் சேவையில் ஈடுபடும் அனைத்து பஸ்களின் தரப் பரிசோதனையை உறுதிப்படுத்தவுள்ளதாகவும் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.



# பெரும்பான்மையினருடைய பிரதேசங்களுடன் தமிழ் பிரதேசங்களை இணைக்கத் திட்டமாம்!




எல்லை நிர்ணயம் மூலம் தமிழ் பிரதேசங்களை பெரும்பான்மையினருடைய பிரதேசங்களுடன் இணைக்கும் செயற்பாடு இடம்பெறுகின்றதா என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் பின்னர் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எல்லை நிர்ணயம் தொடர்பாக முன்னாள் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தலைமையில் ஐந்து பேர் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக வவுனியாவில் பல கிராமங்களை அநுராதபுரத்துடன் இணைக்கும் செயற்பாடாகவும், திருகோணமலையின் சில பிரதேசங்களை பொலன்னறுவையுடன் இணைக்கும் செயற்பாடாகவும், தமிழ் பிரதேசங்கள் பெரும்பான்மையினருடைய பிரதேசங்களுக்குள் உள்வாங்குவதற்கான செயற்பாடாகவும், எங்களது பிரதேசங்களை காவு கொள்ளக்கூடிய நிகழ்ச்சி நிரலிலே எல்லை நிர்ணயம் இடம்பெறலாம் என்ற சந்தேகம் எழுகின்றது.

இந்த எல்லை நிர்ணயம் தொடர்பாக வெளிப்படைத் தன்மை இருப்பதோடு, இது தொடர்பாக மக்களுடனும், மக்கள் பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடி ஓர் இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும். அத்துடன் ஐந்து பேரை உள்ளடக்கிய எல்லை நிர்ணய குழு தனித்து, தன்னிச்சையாக தங்களது முடிவை எடுத்து செயற்படுவதற்கு ஒரு காலமும் அனுமதிக்க மாட்டோம். மேலும் இதன் ஊடாக நகர சபை மற்றும் பிரதேச சபை தேர்தல்களை பிற்போடுவதற்கான நிலையும் காணப்படுகின்றது.

அத்துடன் தற்போது நகரசபை மாநகரசபையாகவும், பிரதேச சபைகள் நகரசபைகளாகவும் மாற்றப்பட்டுள்ளன. எல்லை நிர்ணம் செய்யாமல் எவ்வாறு சபைகளைத் தரமுயர்த்தினார்கள் என்ற கேள்வி எழுந்துள்ளது. ஆனால், எல்லை நிர்ணயத்தை குறிப்பிட்ட கால எல்லைக்குள் நடத்தி முடித்து தேர்தலை நடத்துவதற்கான முயற்சியை முன்னெடுக்க வேண்டும்.

காலத்தை பின்னடிக்காது உடனடியாக ஒரு கால எல்லைக்குள் எல்லை நிர்ணயத்தை மேற்கொண்டு அதனை மக்களிடமும், மக்கள் பிரதிநிதிகளிடம் காண்பித்து தேர்தலை நடத்த வேண்டும். மக்களது பொதுவான அபிப்பிராயத்தைப் பெறுவதற்காக தேர்தல்களை பின்போடாது நடத்துவதற்கு ஜனாதிபதி கவனம் செலுத்த வேண்டும். மக்கள் ஒரு மாற்றத்தை விரும்புகிறார்கள்.

மஹிந்த ராஜபக்ஷவினர் மக்களால் ஒதுக்கப்பட்ட நிலையில் தற்போது மீள தமது செல்வாக்கை நிலை நிறுத்த முற்படுகிறார்கள். ஜனாதிபதி, ஜனநாயகத்தை பேசிக் கொண்டு அவர்கள் சொல்லும் செயற்பாட்டை செய்யக் கூடாது. அவர்களின் நிகழ்ச்சி நிரலில் ஜனாதிபதி செயற்படுகின்றார் என்ற குற்றச்சாட்டு பலரிடம் இருக்கின்றது. இதனை ஜனாதிபதி மாற்ற வேண்டும்.

இது தவிர, மஹிந்த அமரவீர அமைச்சர் கடந்த 23 ஆம் திகதி வவுனியாவிற்கு விஜயம் செய்தார். விவசாய அமைப்புக்களை அழைத்து வனவளத்திணைக்களங்களின் காணிகளில் உழுந்து சாகுபடி செய்யலாம் என ஆசை வார்த்தை கூறினார். தற்போது காணிகளைத் துப்புரவு செய்து விவசாயிகள் உழும் மட்டும் பொறுமையாக இருந்த வனத் திணைக்களத்தினர் அவர்கள் உழுத பின் அதில் காட்டு மரங்களை நடும் செயற்பாட்டை முன்னெடுத்துள்ளனர்.

இதனை ஏற்க முடியாது. இது பற்றி நாடாளுமன்றத்திலும் பேசுவோம். பணத்தை செலவு செய்து உழுத பின் வன திணைக்களம் செய்யும் செயற்பாடு ஏற்க முடியாது. இதனால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். வன திணைக்களம் வழக்கு தாக்கல் செய்யவும் நடவடிக்கை எடுத்துள்ளது. அமைச்சர் மௌனம் காக்காது உடனடியாக இந்த விடயத்தில் கவனம் செலுத்தி விவசாயிகளுக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். – எனத் தெரிவித்தார்.

# அடுத்த வருடம் முட்டைக்கு நாட்டில் தட்டுப்பாடு வரும்!

அடுத்த வருடம் நாட்டில் முட்டை தட்டுப்பாடு ஏற்படும் என அகில இலங்கை கோழிப்பண்ணை உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர தெரிவித்துள்ளார்.

கால்நடை தீவன இறக்குமதி குறைவடைந்தமை மற்றும் கடந்த பருவத்தில் நிலவிய பொருளாதார சிரமங்களால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார். தற்போதைய சூழ்நிலையில் முட்டையின் விலை மீண்டும் உயர்ந்து வருகிறது.

ஒரு முட்டை 50 ரூபாவுக்கு விற்க வேண்டிய நிலையில், தற்போது ஒரு சில கடைகளில் 53 ரூபாவுக்கு முட்டை விற்கப்படுகிறது.

இந்த நிலைமையை எதிர்கொண்டு நுகர்வோர் முட்டைகளை கொள்வனவு செய்வதை தவிர்த்து வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.



# 35 வயதிற்கு மேற்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களை பட்டதாரி நியமனத்தில் ஆசிரியர் சேவைக்கு உள்வாங்குக!

## வடமாகாண பட்டதாரிகள் ஒன்றியம் கோரிக்கை




பட்டதாரி நியமனத்தில் 35 வயதிற்கு மேற்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆசிரியர் சேவைக்கு உள்வாங்குமாறு வடமாகாண பட்டதாரிகள் ஒன்றிய தலைவர் சிவசுப்பிரமணியம் லோகதாஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர், 35 வயதுக்கு மேற்பட்ட 8 ஆயிரம் பட்டதாரிகள் பாடசாலை ஆசிரியர் பயிற்சிக்காக காத்திருக்கிறார்கள்.

அரசாங்க சேவையில் 35 வயதுக்கு மேற்பட்ட பட்டதாரிகளை நியமனத்துக்கு உள்வாங்கியது போல 35 வயதிற்கு மேற்பட்ட பட்டதாரிகளாக இருக்கின்ற அபிவிருத்தி உத்தியோகத்தர்களை இந்த சந்தர்ப்பத்தில் ஆசிரியர் சேவைக்கு உள்வாங்கப்பட வேண்டும்.

ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக்காலத்தில் தொண்டராசிரியர்கள் 100 நாள்கள் பாடசாலையில் தேசிய பாடசாலை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பயிற்சியின் பின்னர் ஆசிரியர் சேவைக்குள் உள்வாங்கப்பட்டார்கள்.

அதேபோல் 2018 ஆம் ஆண்டு தேசிய பாடசாலை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நேர்முக மற்றும் பரீட்சை மூலமும் உள்வாங்கப்பட்டார்கள். இந்நிலையில் எம்மை பரீட்சை ஒன்றை வைத்து ஆசிரியர் சேவைக்கு உள்வாங்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். ஆனால் தற்போது அரசாங்கம் இருக்கும் சூழ்நிலையில் எம்மை பரீட்சை மூலம் உள்வாங்குவதற்கு நிதி உட்பட பல இடர்பாடுகள் காணப்படுகின்றன.

அதனை சமாளிப்பதற்காக எமது அரசாங்கத்துக்கு நாம் செய்யும் தியாகமாக எம்மை ஒரு வருடகாலத்துக்கு அபிவிருத்தி உத்தியோகத்தராக இருந்து அதன் பின் எம்மை ஆசிரியர் சேவைக்குள் உள்வாங்கினால் அரசாங்கத்துக்கு செய்யும் தியாகமாக அமைவதுடன் அரசாங்கத்தின் நிதி பிரச்சினைக்கும் தீர்வாக அமையும். – எனத் தெரிவித்தார்.

# கவிஞர் சிங்கராயர் எழுதிய உயிராயுதம் குறுங்காவியம் நூல் வெளியிட்டு வைப்பு!

(இ.கலையமுதன்)

கவிஞர் மு.சிங்கராயர் எழுதிய "உயிராயுதம்" குறுங்காவியம் நூல் வெளியீட்டு வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள கலைத் தூதுக் கலையகத்தில் கிளிநொச்சி அன்னை இல்ல இயக்குநர் அருட்திரு. செ.அன்புராசா தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

மேற்படி நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகவும், யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் அருட்திரு.ஏ.பி.திருமகன் சிறப்புவிருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் ஓய்வுநிலை அதிபரும், மூத்த கவிஞருமான சோ.பத்மநாதன் நூலின் மதிப்பீட்டுரையை நிகழ்த்தினர்.






யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா நூலை வெளியிட்டு வைத்ததுடன், கவிஞர் மு.சிங்கராயரையும் பொன்னாடை அணிவித்து கௌரவித்தார்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# அமெரிக்க திறைசேரி செயலர் இவ்வாரம் இந்தியா வருகிறார்

அமெரிக்க திறைசேரி செயலர் ஜேனட் யெலன், நவம்பர் 11ஆம் திகதி அமெரிக்க – இந்தியா பொருளாதார மற்றும் நிதிக் கூட்டாண்மையில் பங்கேற்பதற்காக இந்த வாரம் புதுடில்லிக்குச் செல்வார் என்று அமெரிக்க திறைசேரி கடந்த வெள்ளிக்கிழமை அறிவித்தது.

நவம்பர் 11 ஆம் தேதி அமெரிக்க – இந்தியா பொருளாதார மற்றும் நிதிக் கூட்டாண்மையில் பங்கேற்பதற்காக கருவூலச் செயலர் ஜேனட் எல். யெலன் இந்தியாவின் புதுடில்லிக்குச் செல்வார் என்று அமெரிக்க திறைசேரி ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

தொடர்ந்து ஆழமாகி வரும் இந்தியாவுடனான அமெரிக்க கூட்டுறவின் வலிமையை திறைசேரி செயலர் யெலன் வரவிருக்கும் வெள்ளியன்று எடுத்துக்காட்டுவார். அவர் தொழில்நுட்பத் துறைத் தலைவர்களைச் சந்திப்பார். மைக்ரோசாஃப்ட் இந்தியா மேம்பாட்டு மையத்தைப் பார்வையிடுவார். அங்கு அவர் இந்தியாவுடனான அமெரிக்காவின் பொருளாதார கூட்டாண்மை குறித்த கருத்துக்களை வழங்குவார்.

அப்போது அமெரிக்க திறைசேரிச் செயலாளர், நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனை சந்தித்து இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்துவார்.

அமெரிக்க – இந்திய பொருளாதார மற்றும் நிதிக் கூட்டாண்மை (EFP) உரையாடலைத் தொடர்ந்து, செயலர் யெலன், அமைச்சர் சீதாராமனுடன் இணைந்து, இந்தியாவில் செயல்படும் முக்கிய இந்திய நிறுவனங்கள் மற்றும் அமெரிக்க நிறுவனங்களின் நிர்வாகிகளுடன் கலந்துரையாடுவார்.

அன்றைய தினத்தில் இறுதியாக, செயலாளர் யெலன் மற்றும் அமைச்சர் சீதாராமன் அமெரிக்க – இந்தியப் பொருளாதார மற்றும் நிதிக் கூட்டாண்மை கலந்துரையாடலில் ஒரு கூட்டு அறிக்கையில் கையெழுத்திடுவார்கள். செயலாளரின் கருத்துக்கள் மற்றும் தீக்கதிர் விவாதத்தில் பங்கேற்பது முன் அனுமதி பெற்ற பத்திரிகைகளுக்கு திறந்திருக்கும். கூட்டாண்மை மற்றும் இருதரப்பு சந்திப்பு மற்றும் கையொப்பமிடும் விழாவில் புகைப்படத் தெளிப்பும் இடம் பெறும்  என்று திறைசேரித் துறை தெரிவித்துள்ளது.






இந்தியாவுக்கான தனது பயணம் முழுவதும், அமெரிக்காவும் இந்தியாவும் தங்கள் பொருளாதார உறவுகளை ஆழமாக்குவதற்கு எவ்வாறு இணைந்து செயல்பட்டன என்பது குறித்து செயலாளர் யெலன் விவாதிப்பார்.

அமெரிக்க மற்றும் இந்திய மக்கள் மற்றும் வணிகங்களுக்கு இடையேயான நெருங்கிய உறவுகளை அவர் முன்னிலைப்படுத்துவார். மேலும் இந்தோ – பசிபிக் பொருளாதார கட்டமைப்பின் மூலம் நமது இருதரப்பு பொருளாதார உறவை மேம்படுத்துவதற்கான வழிகளையும் நண்பர் – பகிர்வு மூலம் வலுவான விநியோகச் சங்கிலிகளையும் அவர் விதந்துரைத்துக் குறிப்பிடுவார்.

அவர் அமெரிக்கா மற்றும் இந்தியாவின் பகிரப்பட்ட ஜனநாயக விழுமியங்களையும், உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடுகளாக விதிகள் அடிப்படையிலான சர்வதேச ஒழுங்கை நிலைநிறுத்துவதற்கான அர்ப்பணிப்பையும் மீண்டும் உறுதிப்படுத்துவார்.

யெலன் அடுத்த மாதம் ஜி20 தலைவர் பதவியை இந்தியா ஏற்றுக்கொள்வதை வரவேற்று, உலகளாவிய காலநிலை நடவடிக்கை மற்றும் பலதரப்பு வளர்ச்சி வங்கிகளை உருவாக்குவதன் மூலம் உலகளாவிய சவால்களில் முன்னேற்றம் காண்பதற்கான வாய்ப்புகள் குறித்தும் விவாதிப்பார்.

யெலன் தனது இந்தியப் பயணத்தை முடித்துக் கொண்டு, நவம்பர் 12ஆம் திகதி நடைபெறும் ஜி20 கூட்டு நிதி மற்றும் சுகாதார அமைச்சர்கள் கூட்டத்தில் அமெரிக்காவைப் பிரதிநிதித்துவப்படுத்த இந்தோனேசியாவின் பாலிக்கு செல்கிறார். மேலும் நவம்பர் 15 மற்றும் 16ஆம் திகதிகளில் நடைபெறும் ஜி20 தலைவர்கள் உச்சி மாநாட்டில் அமெரிக்க அதிபர் ஜோ பிடனுடன் செல்கிறார்.

(மூலம்:ஏ.என்.ஐ.)

# அமெ. தடையை மீறி இந்தியாவுக்கு எரிபொருளை வழங்க ஈரான் தயார்!

## அந்நாட்டின் தூதுவர் வெளிப்படையாகத் தெரிவிப்பு

அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகள் இருந்தபோதிலும், இந்தியா, ஈரான் இரு நாடுகளும் நெருங்கிய உறவைக் கொண்டிருப்பதால், இந்தியாவுக்கு எண்ணெய் வழங்க தெஹ்ரான் தயாராக உள்ளது.

இந்தியாவுக்கான ஈரான் தூதர் டாக்டர் ஈரான் எலாஹி கடந்த வெள்ளிக்கிழமை இவ்வாறு கூறினார்.

ஏ.என்.ஐயுடனான பிரத்யேக பேட்டியில், தூதர் எலாஹி, இந்தியாவுடனான எங்கள் பொருளாதார உறவுகளை அதிகரிக்க நாங்கள் எப்போதும் தயாராக உள்ளோம். அது இந்தியாவைப் பொறுத்தது, நாங்கள் எண்ணெய் வழங்க தயாராக இருக்கிறோம் என்றார்.

இந்தியாவைச் சேர்ந்த பெட்ரோ கெமிக்கல் நிறுவனம் உட்பட ஈரானிய பெட்ரோ கெமிக்கல்கள் மற்றும் பெட்ரோலியப் பொருட்களை விற்பனை செய்வதில் ஈடுபட்டுள்ள சர்வதேச நிறுவனங்களின் நெட்வொர்க்கிற்கு அமெரிக்கா சமீபத்தில் தடைகளை அறிவித்தது. எண்ணெய் மீதான அமெரிக்காவின் தடைகள் சட்டவிரோதமானவை என்று ஈரான் தூதர் கடுமையாக பதிலளித்தார்.

“தடை விதிப்புகள் ஓர் இடைஞ்சலாகும். இந்தியாவும் ஈரானும் தங்கள் தேசிய நலன்களுக்கு ஏற்ப இந்தப் பிரச்சனையை தீர்க்க ஒரு வழியைக் கண்டுபிடிக்க வேண்டும் – சட்டவிரோதமான அமெரிக்கத் தடைகளின்படி அல்ல. நாங்கள் இந்தியாவிற்கு எண்ணெய் விற்று, இந்தியாவிடமிருந்து தேவையானதை வாங்க விரும்புகிறோம் – என்று ஈரான் தூதர் ஏ.என்.ஐயிடம் கூறினார்.

ஈரானின் ஷா செராக் நகரில் ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதத் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் ஈரான் தூதரகம், புதுதில்லியில் உள்ள இந்திய இஸ்லாமிய கலாச்சார மையத்தில் ‘பயங்கரவாதத்திற்கு எதிராக உலகம் ஒன்றுபட்டது’ என்ற தலைப்பில் இரங்கல் பிரார்த்தனை நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தது.

“பயங்கரவாதக் குழுக்களுக்கு எதிராக ஈரானிய அரசாங்கம் இந்தியாவுடன் நெருக்கமான உறவுகளையும் நெருக்கமான ஒத்துழைப்பையும் கொண்டுள்ளது. அந்த ஒத்துழைப்பை நாங்கள் செயல்படுத்துவோம் என்று நாங்கள் நம்புகிறோம் என்று டாக்டர் இராஜ் எலாஹி கூறினார்.

ஈரானுக்கான முன்னாள் இந்தியதூதர்டி.பி.ஸ்ரீவஸ்தவா, சிறுபான்மையினருக்கான தேசிய ஆணையர் (என்.சி.எம்.) முன்னாள் தலைவர் திரிலோச்சன் சிங் மற்றும் பல இஸ்லாமிய மதகுருமார்கள் மற்றும் அறிஞர்கள் இரங்கல் பிரார்த்தனையில் பங்கேற்றனர்.

### அமெரிக்க சிரத்தை

கூட்டு விரிவான செயல்திட்டத்தை (ஈரான் அணுசக்தி ஒப்பந்தம்) மீறி ஈரான் தனது அணுசக்தி திட்டத்தை விரைவுபடுத்துகிறது என்பதை அமெரிக்கா தொடர்ந்து வலியுறுத்துகிறது. ஈரானின் பெட்ரோலியம் மற்றும் பெட்ரோ கெமிக்கல் விற்பனை மீதான தடைகளை அமுலாக்குவதைத் தொடர்ந்து விரைவுபடுத்துவதாக அமெரிக்க அரசாங்கம் கூறியுள்ளது.

“இந்த அமுலாக்க நடவடிக்கைகள் ஈரானின் எண்ணெய் மற்றும் பெட்ரோ கெமிக்கல் ஏற்றுமதிகளை கடுமையாகக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் வழக்கமான அடிப்படையில் தொடரும். இந்த சட்டவிரோத விற்பனை மற்றும் பரிவர்த்தனைகளை எளிதாக்குவதில் ஈடுபட்டுள்ள எவரும் அமெரிக்கத் தடைகளைத் தவிர்க்க விரும்பினால், உடனடியாக நிறுத்த



வேண்டும் என் அமெரிக்க திறைசேரித் துறை கூறியிருக்கிறது.

ஈரானின் அணுசக்தித் திட்டம் முதல் தங்கள் சொந்த மக்களுக்கு எதிரான அதன் ‘துஷ்பிரயோகங்கள்’ வரை, ‘உக்ரைனுக்கு எதிரான ரஷ்யாவின் ஆக்கிரமிப்புப் போரை’ ஆதரிப்பது மற்றும் ட்ரோன்கள் மற்றும் இராணுவப் பயிற்சிகள் மற்றும் பிராந்தியத்தில் ஸ்திரமின்மையை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை ஆதரிப்பது வரையிலான பரந்த அளவிலான ஈரானியக் கொள்கைகள் குறித்து அமெரிக்க அரசாங்கம் தொடர்ந்து அக்கறை கொண்டுள்ளது.

(மூலம்:ஏ.என்.ஐ.)

காலைக்கதிர் Kalaikkathir

# காலநிலை மாற்றங்கள் தொடர்பிலான அமைச்சரவை செயலகம் அமைப்பது குறித்த பத்திரம் ஒருவாரத்தில்!

## ருவன் விஜயவர்தன கூறுகிறார்



ஒரு வாரத்தில் காலநிலை மாற்ற செயலகத்தை அமைப்பதற்கான அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்படும் என ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜயவர்தன தெரிவித்தார்.

இதற்கு மேலதிகமாக, காலநிலை மாற்றத்தை இலங்கை எவ்வாறு எதிர்கொள்கிறது மற்றும் அதை எவ்வாறு நிர்வகிப்பது என்பது தொடர்பான சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளைத் தயாரிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாக ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜயவர்தன தெரிவித்தார்.

எகிப்து விஜயத்தை முடித்துக் கொண்டு ஜனாதிபதி இலங்கை திரும்பியதும் இந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும் என ருவான் விஜயவர்தன குறிப்பிட்டார்.

# விளையாட்டு வீரர்களின் நடத்தை குறித்து பல முறைப்பாடுகள் பதிவு!

## விளையாட்டுத்துறை அமைச்சு தெரிவிப்பு



விளையாட்டு வீரர்களின் நடத்தை தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என விளையாட்டுத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

பாலியல் குற்றச்சாட்டில் தனிஷ்க குணதிலக்க கைது செய்யப்பட்டதன் பின்னர், இந்த முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் கலாநிதி அமல் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் உள்ளக விசாரணை நடத்துமாறு ஏற்கனவே இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# போதைக்கு அடிமையான 183 பேர் யாழில் கடந்த மாதம் அடையாளம்!

*யாழ்ப்பாணம், நவ. 08*

*யாழ்ப்பாணத்தில் கடந்த மாதத்தில் மாத்திரம் 183 பேர் ஹெரோயினுக்கு அடிமையானவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.*

*சிறைச்சாலைகளில் இருந்து மருத்துவ பரிசோதனைக்காக அனுப்பப்பட்டவர்களில் 155 பேரே இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ளனர்.*

*அதேவேளை நீதிமன்றங்களால் மருத்துவ பரிசோதனைக்காக அனுப்பப்பட்டவர்களில் 28 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என யாழ்.போதனா தகவல்கள் தெரிவிக்கின்றன.*

# தும்பு உற்பத்தியாளர்கள் சிலர் ரிஷாத்துடன் கலந்துரையாடல்



புத்தளம், மதுரங்குளி தும்பு உற்பத்தியாளர்களுக்கும், மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீனுக்குமிடையிலான சந்திப்பு, விருதோடை பகுதியில் இடம்பெற்றது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக, தும்பு உற்பத்தியாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக இங்கு கலந்தாலோசிக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த ரிஷாத் எம்.பி. கூறியவை வருமாறு –

புத்தளம் மாவட்டத்தில் வாழ்கின்ற தும்பு உற்பத்தியாளர்கள் மிக மோசமான பொருளாதார நெருக்கடிகளுக்கு ஆளாகியுள்ளனர்.

அவர்களின் உற்பத்திப் பொருள்களை, ஏற்றுமதியாளர்கள் 10 வருடங்களுக்கு முன்னர் என்ன விலையில் வாங்கினார்களோ, அதே விலையிலேதான் தற்பொழுதும் வாங்குகின்றனர்.

ஒரு சில ஏற்றுமதியாளர்கள், தும்பு உற்பத்தியாளர்களை அடக்கி, ஒடுக்கி தமது ஏகபோக உரிமைகளை நிலை நாட்ட முற்படுகின்றனர்.

இதனால் சாதாரண உற்பத்தியாளர்களும் அவர்களை நம்பி வாழும் பல்லாயிரக்கணக்கான குடும்பங்களும் பாரிய பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

மேலும், ஏற்றுமதியாளர்கள் தும்பு உற்பத்திப் பொருள்களுக்கான உரிய விலையை வழங்காமல் இழுத்தடிப்புச் செய்வதால், உற்பத்தியாளர்கள் தமது தொழிலை முன்கொண்டு செல்ல முடியாமல் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்கின்றனர்.

இதன் காரணமாக, இலங்கைக்கு பல மில்லியன் டொலர்களைப் பெற்றுக் கொடுக்கும் இந்த தும்பு உற்பத்தித் துறை, இல்லாமல் போகின்ற ஆபத்தான நிலை தென்படுகின்றது.

எனவே, அரசாங்கம், கைத்தொழில் அமைச்சு, ஏற்றுமதி அதிகார சபை ஆகியன இந்த விடயத்தில் தலையீடு செய்வதன் மூலமே, தும்பு உற்பத்தியாளர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும். – என்று கூறினார்.

அத்துடன், தும்பு உற்பத்தியாளர்களின் பொருள்களுக்கான சரியான விலையை நிர்ணயித்து வழங்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு இருக்கின்றது என்பதையும் அவர் இங்கு சுட்டிக் காட்டினார்.



# 2023 ஆம் ஆண்டு வரவு – செலவுத் திட்டம் மக்களுக்கு நன்மை பயக்குமாயின் ஆதரவு!

## ஜீவன் தொண்டமான் திட்டவட்டம்



2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்ட பின்னர் அதன் உள்ளடக்கங்கள் தொடர்பில் ஆராயப்படும்.

மக்களுக்கு நன்மை பயக்ககூடியதெனில் அதற்கு ஆதரவாக வாக்களிப்போம் என்று இ.தொ.காவின் பொதுச்செயலாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

கலாசார அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட நுவரெலியா – கந்தபளை எஸ்க்கடேல் தோட்டத்துக்கான ஆறுமுகம் தொண்டமான் கலாசார மண்டபம் ஞாயிற்றுக்கிழமை இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொது செயலாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தலைமையில் திறந்துவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

2023 ஆம் நிதியாண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் எதிர்வரும் 14 ஆம் திகதி முன்வைக்கப்படவுள்ளது. அதை யார் முன்வைக்கின்றார் என்பது முக்கியம் அல்ல.

அதில் உள்ள விடயங்கள்தான் பிரதானம். அந்தவகையில் பாதீட்டின் உள்ளடக்கங்கள் தொடர்பில் முதலில் ஆராயப்படும். அதில் மக்களுக்கு நன்மை பயக்ககூடிய விடயம் இருந்தால் நிச்சயம் ஆதரிப்போம். ஏனைய கட்சிகளும் ஆதரிக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுப்போம்.

அதேவேளை, பதுளையில் மின்சாரம் தாக்கி உயிரிழந்த தோட்டத் தொழிலாளியின் குடும்பத்துக்கு இழப்பீடாக 40 லட்சம் ரூபாவைப் பெற்றுக்கொடுத்தோம்.

அதேபோல டயகம கிழக்கு பிரிவிலும் மின்சாரம் தாக்கி தொழிலாளி ஒருவர் உயிரிழந்துள்ளார். எனினும், அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டது எனக்கூறி மறைப்பதற்கு தோட்ட நிர்வாகம் முயற்சித்தது. அதற்கு நாம் இடமளிக்கவில்லை.

தொழிலாளர்கள் மத்தியில் ஒற்றுமை இல்லாததால்தான் தோட்ட நிர்வாகத்துக்கு துணிவு பிறக்கின்றது. பதுளை விவகாரத்தில் நாம் போராடும்போது, சில தொழிலாளர்கள் வேலைக்குச்சென்றனர்.

காட்டிக்கொடுப்பு இடம்பெற்றது. அவர்களுடைய குடும்பத்துக்குதானே நடந்தது, நமக்கு ஏன் என இருந்துவிடக்கூடாது. அந்த சம்பவம் நமது குடும்பத்துக்கும் நடக்கும். எனவே, தொழிலாளர்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும். – என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## மதங்களில் ஐதீகங்களும் நடைமுறைகளும்



- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் - 174**

இந்தியாவின் தென்னாட்டையும் இலங்கையிலிருந்து ஆண்ட திராவிட மன்ன ராவணனை ஆரிய மன்னன் இராமன் அழித்த வரலாற்றை சொல்லுவதாக இயற்றப்பட்டது இராமாயணம். இராமன் கிருஷ்ணனின் ஓர் அவதாரமாக இராவணனை அழித்த தினம் என்று தீபாவளியை வட இந்தியாவில் கொண்டாடுகிறார்கள். இலங்கையிலும் இந்தியாவின் தென் மாநிலங்களிலும் இது, ஓரளவே தீமையை நன்மை வென்ற தினமாக அனுஷ்டிக்கப்பட்டாலும், இன்றோ வர்த்தக ரீதிகளாலும் அழுத்தங்களாலும் நத்தார் போன்று இந்திய மக்களின் சர்வதேச பண்டிகையாகப் பாகுபாடு இன்றி உலகெங்கும் கொண்டாடப்படுகின்றது. அந்தப் பண்டிகைகள் எழுந்த பின்னணிகளோ உணர்த்திய நெறிகளோ பின்னடைந்து பேசாப் பொருள்களாகி விடுகின்றன.

அப்படியான வர்த்தக ரீதிகளின்றி, மத ரீதியான ஐதீகங்களில், சிங்கள பௌத்த மக்களோடு தேவநம்பியதிஸ்ஸ உணர்ச்சி ரீதியாக பிணைந்துள்ளமையால் புதிய ஆராய்ச்சிகளோ, ஆதாரங்களோ அவர்களைப் பொறுத்த அளவில் அந்தப் போக்கை மாற்ற போவதில்லை. அந்த மன்னன்




மறவன்புலவு சச்சிதானந்தம்

மிகிந்தலை குன்றில் பௌத்த தர்மங்களை கேட்டபின், அவற்றைக் கடைப்பிடித்து, அதன் வளர்ச்சிக்காக விகாரைகளையும் மடாலயங்களையும் எழுப்பி, தன் மக்களையும் அவ்வழிகளில் நடத்தியவன். பௌத்த தர்மத்தை வளர்ப்பதற்காக அவன் வன்முறைகளைக் கைக்கொண்டான் என ஆதாரங்கள் ஏதுமில்லை. ஆனால் இன்றைய இலங்கையின் மத வெறிப் பேராண்மையில், அவன் அரசாண்ட காலங்களில் முழுத்தீவையுமே தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தான், தமிழ் மக்களோ, தமிழ்ப் பிரதேசங்களோ அவனது ஆட்சியில் இருக்கவில்லை என்ற அரசியல் ஆளுமைகளுக்காக மதத்தின் தர்மங்களை வளர்த்த அவனையும் இழுத்துப் பிரசாரம் செய்கிறார்கள்.

இணக்கங்களுக்கு அறிவுபூர்வமான பாதைகளே தேவை.

தேவநம்பியதிஸ்ஸா பௌத்தத்தின் தர்மங்களையும், அற நெறிகளையும் வளர்த்த மன்னன். சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கையில் மத உணர்ச்சிகளைக் கிளறி ஆட்சி பீடத்திற்கு வந்த தலைவர்கள் இந்த மன்னனோ, கௌதம புத்தரோ கடைபிடித்த தர்மங்களைக் கடைபிடிக்கவில்லை. அதில் விளங்காப் பொருளாக உறைந்து வெளிப்படும் முரட்டுத்தனத்துக்கு அடிபணிந்ததால் அந்தத் தலைவர்களில் யாரும் தேவநம்பியதிஸ்ஸவின் விகாரையின் முன்னரோ, அவன் ஞானம் பெற்ற மிகிந்தலையிலோ பதவிப்பிரமாணம் செய்து கொண்டவர்கள் அல்லர். அவர்கள் கண்டியில் தலதா மாளிகையிலோ, துட்டகைமுனு கட்டிய ரூவான் வெலிசயவிலோதான் பேராண்மையில் ஆட்சி நடத்த அவற்றை அங்கு செய்தார்கள்.

ஆதலால் இன்றைய பூகோள நியதிகளில் சிங்கள பௌத்தத்தின் பேராண்மைகளில் தமிழ் மக்கள் தேவநம்பியதிஸ்ஸ தீசன்தான் என ஆதாரப்படுத்தி, அவர்கள் தமிழ் இராசதானிகளை ஆண்டார்கள் என நிரூபித்தால், அவற்றை சிங்கள மக்கள் ஏற்று மீளக் கையளிக்க வேண்டும் என்ன எண்ணுவது பிரயோசனமற்றவை.



கலாநிதி ஞானந்தநாத் ஒபயசேகர (Prof Gnananthanath Obeyasekara) 'பௌத்தம், இனக் கோட்பாடுகளும் அடையாளங்களும் – பௌத்த ஆய்வாளர்களுக்கான சவால்' (Buddhism Ethnicity and Identity - a problem of Buddhist Historians) என்ற தலைப்பில் ஆராய்ச்சிப் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் தனது முடிவுரையில் "சமாதானத்தையும் வன்முறையற்ற கோட்பாடுகளையும் போதிக்கும் பௌத்த மதம் கடந்த இரண்டு தசாப்த காலங்களாக ஏன் தீவிர வன்முறைகளைக் கையாண்ட சமுதாயத்தை ஏற்படுத்தியது என்ற கேள்வியை பல மேல்நாட்டு அறிஞர்கள் என்னைப் போன்ற ஆராய்ச்சியாளர்களிடம் கேட்கின்றார்கள். என்னைப் பொறுத்தளவில் இது வெளிப்படையான கேள்வியானாலும் பிழையானது என அபிப்பிராயப்படுகிறேன். எப்படி ஒவ்வொரு நாட்டிலும் அந்தந்த நாட்டின் மதங்கள், அங்குள்ள சமுதாயப் பொருளாதார நிலைகளால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்க்க முடியாததோ, அதேபோல் பௌத்தமும் ஸ்ரீலங்காவில் அதன் தாக்கங்களை எதிர்த்து நிற்பதற்கு முடியாததாகிறது.

"ஆனால் அது தொடர்பான இன்னும் ஒரு கேள்வி வைக்கப்படலாம் எனக் கருதுகிறேன்.

அது, 'எப்படி பௌத்த மத தலைவர்களும் துறவிகளும் பௌத்த சாதனங்களுக்கும் கோட்பாடுகளுக்கும் அமைய ஒரு புதிய சமுதாயத்தை, அழிவிற்கு கொண்டு செல்லும் சிங்கள தேசியவாதத்தை விடுத்து, செயல்படுத்த விமர்சனங்கள் வைக்க முடியும்' என்பதே. அது,எனக்கு அப்பாற்பட்டதும் மிகவும் சிக்கலானதும் கூட. ஆனால் அப்படியான பௌத்த கோட்பாடுகளில் எழும் கருத்துக்கள் ஸ்ரீலங்காவின் சிங்கள – பௌத்த மக்களின் சிந்தனைகளை ஆட்கொண்டு மாற்றங்களை கொண்டு வராத மட்டில் அவர்களுக்கு விடிவு இல்லை" – என்கிறார்.

இவற்றுக்கெல்லாம் மணி கட்டுவது யார்?

'மகா சங்கம்' தானே மகாபோதி மரம் என நிற்கிறது. தமிழ் மக்கள் அரசடியில் பிள்ளையார் என நினைத்தாவது அதனைச் சுற்ற வேண்டும் என்ற எண்ணங்களிலோ, மமதைகளிலோ. 'துன்பத்தைத் தூக்கிச் சுமக்க நினைத்தவனை சொன்னாலும் கேட்பானோ ஞானக்கிளியே!' என்ற சித்தர் பாடல்தான் நினைவுக்கு வருகிறது

### இணக்கத்தின் போர்வை

நண்பர் மறவன்புலவு சக்திதானந்தன்



சன்சோனிக் குழுவின் முன் சாட்சியங்கள் தரப்பட்ட நேரங்களில் தனக்கு நேர்ந்தவற்றை சுவாரஸ்யமாக – வேதனை நிறைந்தவையானாலும் – கூறுவார். அவர் அப்பொழுது ஐ.நா. கட்டமைப்பு ஒன்றின் மூலம் மீன்பிடித் திணைக்களத்திற்கு (Department of Fisheries) சிறப்பு அதிகாரியாகப் பணிக்கு அமர்த்தப்பட்டு இருந்தார். அவர் மொரிசியஸ் தீவில் பணியாற்றி அங்கிருந்து ஸ்ரீலங்காவுக்கு இந்தப் பணிகளுக்காக வந்தார் என்று ஞாபகம். கலவரத்தில் அன்று தமிழர் என்ற பார்வையில் ஐ.நா பிரதிநிதி என்ற சர்வதேசப் பாதுகாப்பு இருந்தும் தாக்கப்பட்டார். கலவரங்கள் அடங்கிய சில நாள்களின் பின் அவர் தனது பணிகளைத் தொடர விரும்பாது, அவை பற்றி பேசுவதற்காக அலுவலகம் சென்ற போது, பொறுப்பதிகாரி சச்சிதானந்தத்திடம் வெகு விநயமாக பதவியில் தொடர்ந்து சேவையாற்றுமாறு கேட்ட பொழுது, அந்த அதிகாரி "சச்சி..! இந்த நாட்டில் இப்படிக் கலவரங்கள் வருவது மழைக்காலங்களில் வெள்ளம் வருவது போல. சில நாள்கள் வெள்ளத்தினால் கஷ்டம் இருக்கும். ஆனால் பெரும் முயற்சிகள் இன்றி அது வற்றிப் போகும். பழைய நிலைக்கு திரும்பி போய்விடும். வெள்ளத்தோடு எப்படி நாங்கள் வாழப் பழகிக் கொள்கிறோமோ, அதைப்போல இவற்றோடும் இணைந்து வாழப் பழகிக் கொள்ள வேண்டும்" என்று கூறினாராம்.

அது, 'அவர்கள் அடிப்பார்கள். அதைப் பொருட்படுத்த வேண்டாம். சில நாள்களில் அணைப்பார்கள். பின் அடிப்பார்கள். இவையெல்லாம் இங்கு வாழ்வதின் சகஜங்கள்' என்று தனக்குப் பட்டதாக சொல்லுவார். அதை ஏற்க அவர் தயாராகவில்லை. வெளியேறி பின்னர் சென்னையில் குடியேறி பணியாற்றினார் – தமிழர் விடுதலைக்காக.

அதில் எழுகின்ற கேள்வி, அதுதான் இணக்கமா என்பதுதான்.

(வளரும்....)

# நாடாளுமன்றத்தில் இரட்டைக் குடியுரிமை உள்ளவர்கள் இருக்கிறார்களா என்பதைக் கண்டறிவது கடினம் அல்ல!

## சரத் பொன்சேகா கூறுகின்றார்



நாடாளுமன்றத்தில் தற்போது சுமார் பத்து இரட்டைக் குடியுரிமை பெற்றவர்கள் உள்ளனர் என்றும் அவர்களைக் கண்டுபிடிப்பது அவ்வளவு கடினம் அல்ல எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

மேலும் குடிவரவுத் திணைக்களத்தில் இரட்டைக் குடியுரிமைக்காக ஜனாதிபதியும் கையொப்பமிடுவதால், அரச தலைவர் என்ற முறையில் ஜனாதிபதி அலுவலகமும் தேவையான ஆவணங்களைக் கொண்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

கண்டியில் இடம்பெற்ற கட்சி கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இரட்டைக் குடியுரிமை பெற்றவர்கள் நாடாளுமன்றத்தில் அமர முடியாது என்பது இப்போது அரசமைப்புச் சட்டத்துக்கு உட்பட்டுச் செயற்படுகிறது. அப்படிப் பட்டவர்கள் சுமார் பத்து பேர் நாடாளுமன்றத்தில் இருக்கிறார்கள் என்றும் அவர்கள் யார் என்று தெரியவில்லை என்பதுடன், அவர்களைப் பற்றிய விவரங்கள் இல்லை என்பதை ஏற்றுக்கொள்வது கடினம் என அவர் தெரிவித்தார்.

இரட்டைக் குடியுரிமை பெற்றதன் மூலம், மேற்படி நபர் இந்த நாட்டில் தனது குடியுரிமையை இழக்கிறார். அதன் காரணமாக அவர் மீண்டும் இந்த நாட்டில் தனக்கு இரட்டைக் குடியுரிமை வழங்குமாறு கோரவேண்டும் என்றும் அதன்பின்னர் அந்த நபர் குடிவரவுத் திணைக் களத்தில் பதிவு செய்திருக்க வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இரட்டைக் குடியுரிமை நாட்டின் அரச தலைவரால் அங்கீகரிக்கப்பட்டது என்றும் எனவே, அது ஜனாதிபதி அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

எனவே, நாடாளுமன்றத்தில் இரட்டைக் குடியுரிமை உள்ளவர்கள் இருக்கிறார்களா என்பதைக் கண்டறிவது அவ்வளவு கடினம் அல்ல என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா மேலும் தெரிவித்தார்.

# கடன் வழங்குனர்களுடனான பேச்சு 2 ஆவது சுற்று வெற்றிகரமாக முடிந்தது

## ஷெஹான் சேமசிங்க தகவல்

இலங்கையின் கடன் வழங்குநர்களுடனான இரண்டாவது சுற்றுப் பேச்சு வெற்றிகரமாக முடிவடைந்ததாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

சட்ட ஆலோசகர்கள், நிதி ஆலோசகர்கள் மற்றும் சீனா, இந்தியா மற்றும் ஜப்பான் உள்ளிட்ட முக்கிய கடன் வழங்குநர்கள் கலந்துரையாடலில் இணைந்திருந்தனர் என அவர் குறிப்பிட்டார்.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெறுவதற்கும் நாட்டின் கடனை மறுகட்டமைப்பதற்காகவும் மார்ச் மாதத்தில் இருந்து பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன.

இந்த நிலையில், அனைத்து கடன் வழங்குநர்களுடனும் வெளிப்படைத்தன்மையுடன் கையாள்வதற்கு இலங்கை இணங்கியுள்ளதாக இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை மத்திய வங்கியும் நிதியமைச்சும் கடன் வழங்குநர்களுடன் இணைந்து அவர்களுக்குத் தேவையான தகவல்களையும் தெளிவுபடுத்தல்களையும் வழங்குவதாகத் தெரிவித்துள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.



இலங்கை தனது கடனாளிகளிடமிருந்து உறுதிமொழியைப் பெற்றவுடன், சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர் சபை அதன் அனுமதியை வழங்கும் என்றும் இந்த செயன்முறைக்கு இந்த விவாதங்கள் இன்றியமையாதவை என்றும் அவர் கூறினார்.

2022 ஆம் ஆண்டு இறுதிக்குள் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற இலங்கை எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இந்திய மீனவர்கள் 15 பேரில் 14 பேருக்கு விளக்கமறியல்!

## ஒருவர் சிறுவர் நன்னடத்தைப் பிரிவுக்கு

அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைகளுக்காக கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களில் 14 பேரை எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கடந்த சனிக்கிழமை 2 படகையும் அதில் இருந்த 15 மீனவர்களையும் கடற்படையினர் கைது செய்தனர்.

இதன்போது மீனவர்களில் இருவருக்கு திடீர் சுகவீனம் ஏற்பட்டதை அடுத்து சிகிச்சைக்காக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

ஏனைய 13 இந்திய மீனவர்கள் கடற்படையினரின் விசாரணைகளின் பின் மன்னார் மாவட்ட கடற்தொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கடற்தொழில் திணைக்கள அதிகாரிகள் குறித்த 15 இந்திய மீனவர்களையும் நேற்று திங்கட்கிழமை மன்னார் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.

விசாரணைகளை மேற்கொண்ட நீதிவான் 14 பேரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட அதே வேளை 14 வயது சிறுவனை சிறுவர் நன்னடத்தை பிரிவில் ஒப்படைக்க உத்தரவிட்டார்.

# கொரிய ஜனாதிபதியின் விசேட பிரதிநிதியை சந்தித்தார் இலங்கையின் ஜனாதிபதி ரணில்!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கொரிய குடியரசின் தூதுக்குழுவின் தலைவர் மற்றும் ஜனாதிபதியின் விசேட பிரதிநிதி நா கியுங் – வோனை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

எகிப்தின் கெய்ரோவில் ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை மாற்ற மாநாட்டின் போது இந்த சந்திப்பு இடம்பெற்றது.

எகிப்தின் ஷர்ம் எல் ஷேக் நகரில் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி 18ஆம் திகதி வரை நடைபெறவுள்ள காலநிலை மாற்றம் தொடர்பான மாநாட்டில் பங்கேற்பதற்காக இலங்கை



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஞாயிற்றுக் கிழமை எகிப்துக்கு சென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக்கை சந்தித்தார் ஜனாதிபதி விக்கிரமசிங்க!



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக்கை சந்தித்து கலந்துரையாடியுள்ளார். எகிப்தின் கெய்ரோவில் இடம்பெற்றுவரும் ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை மாற்றம் தொடர்பான மாநாட்டின் போது இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

எகிப்தின் ஷர்ம் எல் ஷேக் நகரில் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமான இந்த மாநாட்டில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எகிப்துக்கு சென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# எருக்கலம்பிட்டி கிராமத்தில் அமைக்கப்பெற்ற 75 வீடுகள் பயனாளிகளிடம் ஞாயிறு கையளிப்பு!



மன்னார் எருக்கலம்பிட்டி கிராமத்தில் முதல் கட்டமாக அமைக்கப்பட்ட 75 வீடுகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன.

யுத்தத்துக்கு பின்னர் மீளக் குடியேறிய மக்களுக்கான வீட்டுத் திட்டம் பூரணத்துவம் அடையாத நிலையில் இந்த வீடுகள் அமைக்கப்பட்டன.

இதனை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மற்றும் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் உள்ளிட்ட அதிதிகள் இணைந்து உத்தியோகப்பூர்வமாக பயனாளிகளுக்குக் கையளித்தனர்.

தலா 13 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட மேற்படி வீடுகளை கையளித்து வைக்கும் நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# இன்று பௌர்ணமி சமயம் வருவதால் இந்தச் சந்திர கிரகணம் சக்தி மிக்கது





(காரை சகா)

பௌர்ணமியில் வருகின்ற சந்திர கிரகணம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணி தொடக்கம் மாலை 6:30 மணிவரை இடம் பெற இருக்கின்றது. இது பௌர்ணமி திதியில் வருகின்ற காரணத்தினால் மிகவும் சக்தி மிக்கதாக இருக்கும் என்று வரலாற்று பிர சித்தி பெற்ற மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ கோவர்தன சர்மா தெரிவித்தார்.

நேற்றைய பௌர்ணமி தின பூஜை ஆலய தலைவர் கி.ஜெயசிறில் தலைமையில் நடைபெற்றது. ஆலய பரிபாலன சபை ஆலோசகர் வி.ரி. சகாதேவராஜா திருமூலர் பற்றி விளக்கமளித்தார். நேற்று பூஜையின் இறுதியில் பிரதம குரு கோவர்த்தன சார்மா மேலும் உரையாற்றுகையில் கூறியவை வருமாறு:-

ஐப்பசி மாதத்திற்குரிய பூரணையானது இன்று (நேற்று) திங்கட்கிழமை பிற்பகல் நான்கு முப்பது மணி தொடக்கம் நாளை (இன்று) செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணி வரை ஆகும் .

ஆங்கில காலண்டரில் இன்றைய தினம் பூரணை என்று விடுமுறை என்று இருக்கின்றது .தமிழை பொறுத்தவரையிலே இன்று திங்கட்கிழமை மாலை 4:30 மணி தொடக்கம் நாளை செவ்வாய்க்கிழமை 5:30 மணி வரைக்கும் பூரணை காலம். எனவே அந் தப் பூரணை திதிக்குள் வருகின்ற இந்த சந்திர கிரகணம் சக்தி மிக்கதாகும். மாலை 6:30 மணியளவில் இந்துக்கள் ஸ்நானம் செய்து புதிய உணவை உண்ணுமாறு கேட்டுக் கொள்கின்றோம். - என்றார்.

## மலையகத் தமிழர் ....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

மலையகத் தமிழர்கள் இந்த நாட்டில் வாழும் இன்னுமொரு தேசிய இனம் என ஜனாதிபதி எதிர்வரும் சுதந்திர தினத்தில் அறிவிக்க வேண்டும். அதற்கான அழுத்தத்தை மலையகக் கட்சிகள் கொடுக்கக் கூட்டு முயற்சி எடுத்தல் வேண்டும். பூனைக்கு மணி கட்டுவது யார்?

மலையக மக்கள் சமூக மயமாக்கல் தொடர்பாக ஒரு குழு அமைக்க போவதாக கடந்த வாரத்தில் ஜனாதிபதி அறிவித்திருந்தார். இது வெறும் வாய்க்குழுவாக அமைந்துவிடக் கூடாது. ஜனாதிபதியின் அங்கீகாரம் பெற்ற நிறைவேற்று ஆணைக் குழுவாக அமைதல் வேண்டும். இக்குழு மலையக மக்கள் அரசியல் அபிலாஷைகளைத் தெளிவாக அறிந்து கொள்வதற்குக் கடந்த காலங்களில் மலையக அமைப்புகள் அரசியல் யாப்பு சீர்திருத்தத்துக்காக முன்வைத்த ஆலோசனைகளை அலசி ஆராய்ந்து ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்க வேண்டும். அத்தோடு அவசரமாக புதிய ஆலோசனை அறியும் செயற்பாட்டையும் முன்னெடுக்க வேண்டும். இதன் ஓரங்கமாக மலையகத் தமிழர்கள் இந்த நாட்டில் வாழும் தேசிய இனம் என சுதந்திர தினத்தில் அறிவித்தால் அது நாட்டின் அரசியலுக்கும் மலையக மக்களுக்கும் கௌரவமாக அமையும்.

இத்தகைய அரசியல் சமூகப் பின்னணியில் மலையகக் கட்சிகள், மலையக மக்களின் அரசியல் சார்ந்து அது தொடர்பான தெளிந்த கருத்தை ஊடகங்கள் மூலம் மக்கள் முன்வைத்தால் சிவில் சமூக அமைப்புகள், அரசசார்பற்ற நிறுவனங்கள் அதனை மையப்படுத்திய இரு நூற்றாண்டு நிகழ்வை மைப்படுத்தி மக்கள் சக்தியைப் பலப்படுத்தி முன்னோக்கி செல்ல முடியும். இல்லையேல் இரு நூற்றாண்டு நிகழ்வு விழாக்கள் வெறும் வானவேடிக்கயாகவே அமைந்து விடும் - என்றுள்ளது.

## பொருளாதார .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்திருந்த நீதியமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷவும் மேற்கண்ட கருத்தைத் தெரிவித்திருந்த நிலையிலேயே சுரேஷ் பிரேமச்சந்திரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

புதியதோர் அரசமைப்பு தொடர்பாக பிரதமர், ஜனாதிபதி மற்றும் பல்வேறுபட்ட அமைச்சர்களும் பல்வேறுபட்ட கருத்துகளைக் கூறி வருகின்றனர். அண்மையில் யாழ்ப்பாணம் விஜயம் செய்த நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ, 'புதிய அரசமைப்பின் ஊடாக, அரசியல் தீர்வே தமிழ் மக்களின் பிரதான எதிர்பார்ப்பு. அதை நாம் நிறைவேற்றியே தீருவோம்' என்று கூறியமையுடன், எம்மைச் சந்திக்கும் சர்வதேசப் பிரதிநிதிகளும் புதிய அரசமைப்புத் தொடர்பிலும் தேசிய இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பிலும் முக்கியத்துவம் கொடுத்துக் கலந்துரையாடி வருகின்றனர். எனவே 'இந்த விடயத்தில் நாம் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்' என்றும் மேலும், 'ஒருவருடத்திற்குள் தீர்வுக்கான அனைத்துப் பணிகளும் நிறைவுக்கு வரவேண்டும்' என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எம்மிடம் தெரிவித்துள்ளார் என்றும் கூறியிருக்கின்றார்.

தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக பல்வேறுபட்ட தீர்வுத் திட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. செல்வநாயகம் காலத்தில், பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தம் என இரு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன. அவை ஒருதலைப்பட்சமாகவே சிங்கள அரசியல் தலைமைகளினால் கிழித்தெறியப்பட்டன. பின்னர் 1972ஆம் ஆண்டு குடியரசு அரசமைப்பு உருவாக்கப்பட்டபொழுது, தமிழரசுக் கட்சியினால் இனப்பிரச்சினைத் தீர்விற்கான ஆறு அம்சக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அப்பொழுது அந்த யாப்பை வடிவமைத்தவர்கள் அவர்களது கோரிக்கைகளை ஏற்றுக்கொள்வதற்கு முன்வரவில்லை. இதன் பின்னர், தமிழ் மக்கள் தமக்கு மாற்றுவழி ஏதும் இல்லை என்ற அடிப்படையில் தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து போராட ஆரம்பித்தனர்.

ஏறத்தாழ முப்பதாண்டு காலம் நீடித்த இந்த ஆயுதப் போராட்டத்தில் பல இலட்சம் தமிழர்களின் உயிர்கள் இழக்கப்பட்டன. பல்லாயிரக்கணக்கான தமிழ் இளைஞர், யுவதிகள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். எம்மக்களின் பல்லாயிரம் கோடிக்கணக்கான சொத்துகள் அழிக்கப்பட்டன. ஆயுதப் போராட்டம் மௌனிக்கச் செய்யப்பட்டு இப்பொழுது பதின்மூன்று ஆண்டுகள் ஆகின்றது. ஆனால் இன்னமும் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு காணப்படவில்லை. தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முகமாக ஒவ்வொரு ஜனாதிபதியும் சில முயற்சிகளை மேற்கொண்டார்கள். ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் காலத்தில் இந்திய-இலங்கை ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. ஆனால் அவரே அந்த ஒப்பந்தத்திற்கு எதிராகப் பின்னர் செயற்பட்டார் என்பதுடன், இன்றுவரை பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் முழுமையாக நடைமுறைப்பத்தப்படவில்லை.

ஜனாதிபதி பிரேமதாஸ அவர்கள் வட்டமேசை மகாநாடுகளை நடத்தினார். விடுதலைப் புலிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தினார். இறுதியில் மங்கள முனசிங்க தலைமையில் ஒரு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை நியமித்தார். அவர்களும் தீர்விற்கான ஓர் அறிக்கையை தயார்செய்து கொடுத்தார்கள். அந்த அறிக்கை பின்னர் கிடப்பில் போடப்பட்டது.

சந்திரிகாகுமாரதுங்கபண்டாரநாயக்க அவர்கள் ஜனாதிபதியாக இருந்த வேளையில், 95ஆம் ஆண்டிலிருந்து 2000ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஒரு தீர்வுத்திட்டம் உருவாக்கப்பட்டது. அதனை இன்றைய ஜனாதிபதியும் அன்றைய எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் தீக்கிரையாக்கியமையுடன் அந்தத் தீர்வுத்திட்டமும் கிடப்பில் போடப்பட்டது. மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்றதன் பின்னர், பேராசிரியர் திஸ்ஸவிதாரண தலைமையில் ஒரு சர்வ கட்சிக்குழு அமைக்கப்பட்டது. அவர்கள் வழங்கிய அறிக்கையும் ராஜபக்ஷவினரால் கிடப்பில் போடப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வற்புறுத்தலின் காரணமாக, மஹிந்த அரசாங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பதினெட்டு சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தியது.

அரசாங்கம் ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைகளை நடத்தத் தயாராக இல்லாததன் காரணத்தினால் அந்தப் பேச்சுவார்த்தைகளும் கைவிடப்பட்டன. இப்பொழுது நாடு பொருளாதார ரீதியாக வங்குரோத்து அடைந்த நிலையில் இருக்கின்றது. உலகம் முழுக்க வாங்கிய கடன்களை மீளச்செலுத்த முடியாதுள்ளதாக அரசாங்கமே அறிவித்துள்ளது. இந்தச் சூழலில் மேற்கொண்டு கடன்களைக் கொடுப்பதற்கும் புதிய முதலீடுகளை இலங்கைக்குக் கொண்டுவருவதற்கும் உலக நாடுகள் எதுவும் தயாராக இல்லை. இந்நிலையில், அரசாங்கத்தைச் சந்திக்கும் சர்வதேச அமைப்புகள், அது உலக வங்கியாக இருக்கலாம், சர்வதேச நாணய நிதியமாக இருக்கலாம், கடன் வழங்கும் நாடுகளாக இருக்கலாம், அவர்கள் தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை முக்கியத்துவப் படுத்துகின்றார்கள். ஆகவே தேசிய இனப்பிரச்சினை தொடர்பில், சர்வதேச சமூகத்திற்கு ஒரு பதில் அளிக்க வேண்டிய கடப்பாட்டில் அரசாங்கம் உள்ளது. அதற்காகவே ஜனாதிபதி தொடக்கம் அமைச்சர்கள் வரை, புதிய அரசியல் சாசனம் குறித்து இப்பொழுது பேச ஆரம்பித்திருக்கின்றார்கள்.

பாதிக்கப்பட்ட தமிழர் தரப்பு, தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வாக ஒரு சமஷ்டி அரசமைப்பு முறை வேண்டும் என்பதை ஏகோபித்த ரீதியில் இலங்கை அரசாங்கத்திற்குக் கையளித்திருக்கின்றது. ஆகவே, விஜயதாஸ ராஜபக்ஷ கூறுவது போன்று தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு ஒருவருட கால அவகாசம் தேவையில்லை. தேவையான அனைத்து வரைவுகளும் அரசாங்கத்தின் வசம் இருக்கின்றன. ஆகவே, குறிக்கப்பட்ட ஒருசில வாரத்திற்குள்ளேயே பேச்சுவார்த்தைகளை முடிக்க முடியும். ஆனால் அரசாங்கம் அதற்குத் தயாராக இருக்கின்றதா என்பது தான் கேள்வி.

ஒருமுறை, இருமுறை அல்ல. ஒவ்வொரு ஜனாதிபதியாலும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டிருக்கின்றார்கள். இப்பொழுதும் வங்குரோத்து அடைந்த பொருளாதாரத்தை நிமிர்த்துவதற்காக மீண்டும் ஒருமுறை புதிய அரசியல் சாசனம் என்று நாடகம் ஆடுகிறார்களா என்ற கேள்வி எம்முள் எழுகின்றது.

இலங்கை பலமொழிகளைப் பேசுகின்ற, பல மதங்களையும், பல கலாசாரங்களையும் பின்பற்றுகின்ற மக்களைக் கொண்ட ஒரு நாடாகும். இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் இருதரப்பினராலும் இது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது. அவ்வாறான ஒரு நாட்டில் தமிழ்த் தேசிய இனமும் ஏனைய சிறுபான்மை இனங்களும் மாறிமாறி வந்த அரசாங்கங்களின் அடக்குமுறைக்கு உள்ளாகி வந்திருக்கின்றன. அந்த அடக்குமுறையின் வடிவங்கள் இன்னமும் தொடர்ந்த வண்ணமே உள்ளன. இவ்வாறான சூழ்நிலையில், பாதிக்கப்பட்ட தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்கு புதிய அரசியல் யாப்பின் ஊடாகத் தீர்வு காணப்படவேண்டுமாயின், அரசியல் யாப்பு உருவாக்கத்தில் சர்வதேச அரசியல் சாசன வல்லுனர்களின் பங்களிப்பும் - குறிப்பாக இந்திய அரசியல் சாசன நிபுணர்களின் பங்களிப்பும் - இடம்பெற வேண்டும். ஆகவே, ஒரு வருடம், ஆறு மாதம், மூன்றுமாதம், நூறுநாள் என்று வெட்டிப்பேச்சு பேசுவதை விடுத்து, விரைவானதும் ஆக்கபூர்வமானதுமான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும் என்று வலியுறுத்துகிறோம். - என்று உள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்
076 443 8622
kalaikkathiradvt@gmail.com

# விவசாய நவீனமயமாக்கல் திட்டமூடாக அந்நியச் செலாவணி பெறப்பட்டுள்ளது!

## மஹிந்த அமரவீர தெரிவிப்பு



விவசாய அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்ற விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் மூலம் குறுகிய நிலப்பரப்பில் அதிக விளைச்சலை பெறக் கூடியதும் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பக் கூடிய வகையில் அந்நிய செலாவணியை ஈட்டித் தரக் கூடிய பயிர் செய்கை நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் விவசாய அமைச்சால் மேற்கொள்ளப்பட்டு வரும் விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பாகப் பார்வையிடுவதற்காக மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை மற்றும் களுவாஞ்சிக்குடி பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு நேரடி விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

இதன்போது வாகரை மாங்கேணி கேலிஸ் நிறுவனத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும்போது தெரிவித்தவை வருமாறு –

வாகரை பிரதேசத்தில் பிப்பிங்காய் (குக்கரிக்காய்) உற்பத்தியில் மேற்படி திட்டத்தின் ஏற்றுமதி மூலம் 3 கோடியே 48 லட்சம் அமெரிக்க டொலர் அந்நியச் செலாவணி பெறப்பட்டுள்ளது என்றும் இந்தத் திட்டத்துக்கு 28 லட்சம் அமெரிக்க டொலர் செலவானதாகவும் முழுதிட்டத்துக்கான செலவை விட வருமானம் தாண்டி நிற்கிறது என்றார்.

இதேபோன்று அநுராதபுரத்தில் இந்தத் திட்டத்தின் கீழ் நவம்பர் 26 ஆம் திகதியில் இருந்து கதலி வாழைப்பழம் வாராந்தம் ஒரு கொள்கலன் டுபாய் நாட்டுக்கு ஏற்றுமதி செய்ய ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. மேலும் கொய்யா, மா, மிளகாய், போன்றவை பாரியளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கிழக்கில் களுவாஞ்சிக்குடியில் இந்திய இன மாதுளம் பழச் செய்கையும் கட்டம் கட்டமாக செய்கை பண்ணப்படுகிறது. இதன் மூலம் நாட்டின் தேவையை 50 வீதம் ஏனும் பூர்த்திசெய்ய முடியும் என நம்புவதாகத் தெரிவித்தார்.

மேலும் இவ்வாறான திட்டம் மூலம் இளைஞர்கள் வெளிநாடு செல்லவோ அரசாங்க வேலைவாய்ப்பை நம்பி இருக்கவோ தேவையில்லை. சுயதொழிலில் ஈடுபட்டு பாரிய அளவில் பணம் சம்பாதிப்பதற்கு நல்லதெனவும் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண விவசாய பிரதி திட்டப்பணிப்பாளர் ஆர்.ஞானச்செல்வத்தின் ஏற்பாட்டில் ஒழுங்கமைக்கப்பட்ட மேற்படி நிகழ்வில், வாகரை பிரதேசத்தில் மாங்கேணி மற்றும் கதிரவெளி ஆகிய கிராமங்களுக்குச் சென்ற அமைச்சர் மாங்கேணியில் பிப்பிங்காய் பயிர்செய்கை மேற்கொள்ளப்படும் இடங்களுக்கு சென்று பார்வையிட்டமையுடன் பயிர் செய்கையாளர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தார்.

இதன்போது பிப்பிங் காய்களின் உற்பத்தியில் விற்பனை விலை தமக்கு போதாமல் உள்ளதாகவும் அதன் விலை அதிகரிப்பின் நிர்ணய விலையைத் தீர்மானித்து தருமாறும் குடியிருப்பு காணிகளுக்கு மின்சாரம் இல்லாமல் உள்ளதாகவும் அதனை பெற்றுத் தருமாறும் என பல் வேறுபட்ட கோரிக்கைகளை அமைச்சரிடம் முன்வைத்தனர்.

வாகரை பிரதேசத்தில் தற்போது சுமார் 500 ஏக்கர் நிலப்பரப்பில் பிப்பிங்காய் பயிர்செய்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாங்கேணியில் பிப்பிங் காய் பதனிடும் கேலிஸ் நிறு வனத்தையும் பார்வையிட்டதுடன் கதிரவெளியில் நிலக்கடலை பதனிடும் மையத்தில் நிலக்கடலை பதனிடல் தொடர்பான விடயங்களையும் அவதானித்தார்.

பின்னர் களுவாஞ்சிக்குடியில் இந்திய மாதுளை பழப் பயிர் செய்கை நடவடிக்கையையும் பார்வையிட்டதுடன் 6 கோடி ரூபா பெறுமதியான உழவு இயந்திரம், கலப்பை உட்பட உதிரிப்பாகங்கள் என்பன விவசாய நவீன மயமாக்கல் பயனாளிகள் சங்கத்துக்கு வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போது அமைச்சருடன் இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரனும் பிரசன்னமாகியிருந்தார். கிழக்கு மாகாண ஆளுநர், கிழக்கு மாகாண பிரதி பிரதம செயலாளர், கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர், கிழக்கு மாகாண விவசாய பணிப்பாளர், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் உட்பட பிரதேச செயலாளர்கள், விவசாய அமைச்சின் உயர் அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# சீனி வரிக் குறைப்பால் 1,670 கோடி ரூபாவை அரசு அர்ப்பணித்துள்ளது

## தேசிய வருமான திணைக்கள அறிக்கை விரைவில் சமர்ப்பிக்கப்படும்!

### நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டி தெரிவிப்பு



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தில் கடந்த 2020 ஆம் ஆண்டு சீனிக்கான இறக்குமதி வரி குறைக்கப்பட்டமை தொடர்பில் கணக்காய்வாளரால் தயாரிக்கப்பட்ட அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு தேசிய வருமானத் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்ட அறிக்கை தனக்கு கிடைக்கப் பெறும் எனத் தெரிவித்த நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டி, அந்த அறிக்கையை விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த 2020 ஆம் ஆண்டு சீனிக்கான இறக்குமதி வரியை அப்போதைய அரசாங்கம் 50 ரூபாவிலிருந்து, 25 சதமாகக் குறைத்தது. எவ்வாறிருப்பினும் இதன் மூலம் அரசாங்கம் எதிர்பார்த்த வாறு எந்தவொரு நன்மையும் மக்களைச் சென்றடையவில்லை. இந்த வரி குறைப்பின் ஊடாக 1,670 கோடி ரூபாவை அரசாங்கம் அர்ப்பணித்துள்ளதாக கணக்காய்வாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இந்தத் தொகையை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்கம் அவதானம் செலுத்த வேண்டும் என்ற பரிந்துரையும் கணக்காய்வாளர் நாயகத்தால் முன்வைக்கப்பட்டிருந்தது. எவ்வாறிருப்பினும் வரி வருமானத் திணைக்களத்தின் ஊடாகவே இந்தத் தொகையை மீளப் பெறுவதற்குரிய நடவடிக்கைகள் தொடர்பில் அவதானம் செலுத்த முடியும்.

அதற்கமைய இதற்குரிய அறிக்கையொன்றைத் தயாரிக்குமாறு வரி வருமான திணைக்களத்துக்கு ஆலோசனை வழங்கியுள்ளேன். அந்த அறிக்கை இந்த வாரம் எனக்கு கிடைக்கப் பெறும். மேற்படி அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும், அதன் பின்னர் உரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் எதிர்பார்த்துள்ளேன். – என்றார்.

# ஆட்காட்டிவெளி மாவீரர்களின் துயிலும் இல்லம் சிரமதானம்!



மாந்தை மேற்கு ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தில், மாவீரர் தின ஏற்பாட்டுகுழுவினரால் ஞாயிற்றுக்கிழமை சிரமதான பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

சிரமதானம் முடியும் நிலையில் துயிலும் இல்ல பகுதிக்கு வந்த அடம்பன் பொலிஸார், சிரமதானம் மேற்கொண்டமை தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டனர். அத்தோடு மாவீரர் தின நினைவேந்தல் மேற்கொண்டால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் ஏற்பாட்டுக்குழுவினரை அச்சுறுத்தியுள்ளனர்.

# ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து எவரும் அரசாங்கத்துடன் இணையமாட்டார்கள்!

## முஜிபுர் ரஹ்மான் அதீத நம்பிக்கை



ஐக்கிய மக்கள் சக்தி, அடுத்து ஆட்சியைக் கைப்பற்றும் கட்சியாக உள்ளமையால், எம்மில் பலர் அரசாங்கத்துடன் இணையவுள்ளனர் எனப் போலியான செய்திகள் வெளியிடப்படுகின்றன. ஐக்கிய மக்கள் சக்தியின் எந்தவொரு உறுப்பினரும் அரசாங்கத்துடன் இணையப் போவதில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

2011 ஆம் ஆண்டு முதல் தற்போதைய பிரதமர் தினேஷ் குணவர்தனவே தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பான குழுவின் தலைவராகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்.

எனினும், அவர் பொறுப்புடன் அந்தச் செயற்பாடுகளை முன்னெடுக்கவில்லை என்பது தெளிவாக தெரியவந்துள்ளது. தற்போதுள்ள முறைமையில் தேர்தல் நடத்தப்பட்டால் பொதுஜன பெரமுனவும், ஐக்கிய தேசிய கட்சியும் படுதோல்வியடையும் என்பதாலேயே அதனை மாற்றுவதற்கு முயற்சிக்கின்றனர்.

கடந்த வாரம் 140 கோடி ரூபா பெறுமதியுடைய அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட பைஸர் தடுப்பூசிகள் காலாவதியாகியுள்ளன என செய்திகள் வெளியாகியுள்ளன. நாட்டில் அத்தியாவசிய தேவைகளைக் கூட பூர்த்திசெய்துகொள்ள முடியாதளவிற்கு பொருளாதார நெருக்கடிகள் தீவிரமடைந்துள்ள நிலையில், இவ்வாறு 100 கோடி ரூபா பெறுமதியுடைய தடுப்பூசிகள் காலவதியாகியுள்ளமைக்கு யார் பொறுப்பேற்பார்கள்?

இது ஒருபுறமிருக்க, மறுபுறம் சுமார் 50 நாள்களாக கடலில் நங்கூரமிடப்பட்டுள்ள மசகு எண்ணெய் கப்பல்களுக்கு செலுத்தப்பட வேண்டிய தாமதக் கட்டணம் 250 கோடி ரூபாவை அண்மித்துள்ளது.

டொலரைத் தயாரப்படுத்திக் கொண்டு கப்பலை முற்பதிவு செய்வதற்குப் பதிலாக, முற்பதிவு செய்த கப்பல் நாட்டை வந்தடைந்த பின்னர் டொலரைத் தேடுகின்றனர். செலுத்தப்படவுள்ள பாரிய தாமதக் கட்டணம் அப்பாவி மக்களின் வரிப்பணமாகும்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ள எரிபொருள் இறக்குமதி தொடர்பான தகவல்களை வழங்குமாறு எழுத்து மூலம் எம்மால் விடுக்கப்பட்ட கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் இறக்குமதி தேசிய பாதுகாப்பு வாய்ந்த விடயமா? அதன் காரணமாகவா அரசாங்கம் தகவல்களை வழங்க மறுக்கிறது? இல்லை. இவ்விடயத்திலும் பாரிய ஊழல் மோசடிகள் இடம்பெறுகின்றன. அதன் காரணமாகவே அரசாங்கம் தகவல்களை வழங்க மறுக்கிறது.

எகிப்தில் நடைபெறவுள்ள மாநாட்டில் கலந்து கொள்வதற்கு அமெரிக்க மற்றும் சீன ஜனாதிபதிகளோ, இந்திய மற்றும் பிரித்தானிய பிரதமர்களோ செல்லவில்லை. ஆனால் கடும் டொலர் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள எமது நாட்டு ஜனாதிபதி மாத்திரம், 10 – 15 பேருடன் எகிப்து சென்றுள்ளார். மக்களை அர்ப்பணிப்புக்களுக்கு தயாராகுமாறு கூறும் ஜனாதிபதியும், இவ்வாறான விடயங்களை அர்ப்பணிக்க வேண்டும்.

ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து பெரும்பாலானோர் அரசாங்கத்துடன் இணையவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படும் விடயம் உண்மைக்கு புறம்பானதாகும். தற்போது பிரதான எதிர்க்கட்சியாகவும், எதிர்காலத்தில் ஆட்சியைக் கைப்பற்றவுள்ள கட்சி என்பதாலும் இவ்வாறு கட்சி தொடர்பில் போலி செய்திகள் பரப்பப்படுகின்றன. – என்றார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.11.2022இல் வெளியிடப்பெற்றது.